www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாதப் இதழ்

சுவடி : 9.09 திருவள்ளுவர் ஆண்டு 2053

14.03.2022 - 13.04.2022

ISSN : 2195-6480

FREE Magazine




ஐ.நா. மனித உரிமை ஆணைச்சபை அமர்வில்

## சிங்களம் சொல்லப் போவது என்ன?

## பயங்கரவாதத் தடைச் சட்டமும் தமிழரின் குருட்டு அரசியலும்...

## பிளாஸ்ரிக் எனும் அரக்கன்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS
BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
149€
பெறுமதியுள்ள
BOX
119€*
கிடைக்கும்
மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

ortel MOBILE




SMART WORLD +5 GB

## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to
20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

ALLNET FLAT +5 GB

## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU

Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***

INTERNET FLAT +5 GB

## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***




**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus+

AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14 மாசி 2022 - 13 பங்குனி 2022
சுவடி / ISSUE 9.09

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany
Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

## அகரம் வாசக அன்பர்கள் விளம்பரதார வள்ளல் பெரு மக்கள் அனைவருக்கும் வணக்கத்தையும், நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறது.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாசி மகப் பெருவிழா வரும் அதிசயத்தைப் பல்லாண்டுகளாக தமிழர் நாம் அறிந்துள்ளோம். ஏறக்குறைய அதே அதிசயத்தை இந்த ஆண்டு 28.02.2022இல் தமிழர் நாம் ஐ.நா.உலக மனித உரிமைகள் ஆணையத்தின் அமர்வில் காண இருப்பதை சில செய்திகள் குறிப்பிடுகின்றன. 2009 இன அழிப்புப் போரின் சுவடுகளை நாம் மறக்காமல், மறைக்காமல் நீதிக்கான போராட்டத்தை இறுதி வரை தொடர வேண்டும்.

எமது பிரச்சினையில் பல வெளி நாட்டவர்கள் மனித உரிமை ஆணையாளர்களாகச் செயற்பட்டு, மூக்குடைபட்ட வரலாற்றை இலங்கையின் சிங்கள அரசும், அதன் கூட்டாளிகளும் வழங்கி உள்ள நிலையில், இப்பொழுது செயலாற்றும் மிச்சலா பச்லெட் அம்மையார் சில கடுமையான கேள்விகளை இலங்கை அரசின்மீது தொடுத்துள்ளதாகச் சில செய்திகள் தெரிவிக்கின்றன. அவை வெற்றியைத் தருகின்றதோ இல்லையோ, தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் தனி நபர் போர்க் குற்ற வழக்குகளாக சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்வதான செய்திகள் எமக்குச் சிறு மன ஆறுதலைத் தருகின்றன.



ஆனால், இவர்களின் முயற்சி பலமான அரசுகளும், அவர்களின் கூலிப் படைகளாக விளங்கும் தமிழ் இனத் துரோகிகளின் சதி வலைகளை அறுத்தெறிந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை நாம் மறந்து விட முடியாது. எனவே, இவர்களின் அர்பணிப்பான செயற்பாடுகளை ஆதரிப்பதும், தேவையான நிதி வலுவை வழங்குவதும் ஒவ்வொரு மனித மனம் படைத்த தமிழனின் கடமையாகும். அதைப் பலரும் ஆர்வத்தோடு செய்ய வேண்டும் என அகரம் கேட்டுக் கொள்கிறது.

மேலும் உக்கிரெயின் நாட்டின் மீது உருசிய அரசு தொடுத்துள்ள இராணுவத் தாக்குதல், எமது விடயத்திலும் இந்தியாவின் கழுகுப் பார்வை மீண்டும் விழும் அறிகுறிகள் தென்படுகின்றன். பல தடைவைகள் எமது ஈழத் தமிழ் மக்களின் இரத்தத்தையும், உயிர்களையும் குடித்த இந்திய ஆரிய இனவெறி அரசு, மீண்டும் சிங்கள ஆரியத்துக்கு சார்பான நிலையை எடுத்துத் தனது கொலைவெறிப் பசியைத் தீர்க்கும் எண்ணத்தில், எமது தமிழ் அரசியல்வாதிகளைத் தன் கைக்குள் போடும் தந்திரத்தில் இறங்குவதாகச் செய்திகள் கூறுகின்றன.

**ஈழத் தமிழர் நாம் இனிமேலும் இந்தியா உட்பட எந்த அரசின் பின்னாலும் போனால், அது எமது இனத்தின் சர்வ நாசமாகத்தான் முடியும். எனவே, 'ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்' தொடரின் ஆசிரியர் சொல்வது போல, சர்வதேச கண்காணிப்பில் நடத்தப்படும் தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பின் அடிப்படையில், சுவிற்சர்லாந்து நாட்டின் அரசைப் போன்ற உலக நடுநிலை நாடாக அமைக்கப்பட வேண்டும் என்பதையும் அகரம் வலியுறுத்த விரும்புகிறது.**

உலக மற்றும் பிராந்திய அரசியல் மீண்டும் எம் இனத்தைச் சுற்றித்தான் உருவாகி வருகிறது. எனவே, பழைய அரசியல் சித்தாந்தங்களையும், அவற்றைப் பல தசாப்தங்களாக வெளி நாடுகளின் சுமைகளைச் சுமந்த கழுதைக் கூட்டமான அரசியல்வாதிகளையும் விரட்டிவிட்டுப் புதுத் தலைமைகளை ஏற்றுச் செயற்படுவோமாக!.

சுதந்திரத் தனித் தமிழ் ஈழம் நோக்கிய உலகத் தமிழர்களின் பயணம் தொடர வேண்டும்.

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர்,** அகரம் குழுமம்




த. எதிர்மன்னசிங்கம்

# பயங்கரவாதத் தடைச் சட்டமும் தமிழரின் குருட்டு அரசியலும்...



இந்தச் சட்டத்தின் தீமைகள் பற்றி முன்னாள் இரண்டு முறைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின், தமிழ் மக்களின் தயவாலும், இலங்கையின் ஜனாதிபதி பதவி வகித்த சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவும், அந்தச் சட்டம் உருவாக ஆதரவளித்த அன்றைய எதிர்க் கட்சித் தலைவரான அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் தலைமையில், அரசியல் செய்த




செய்து வரும் இதே இராஜவரோதயன் சம்பந்தன் பேசுகிறார். அவரோடு ரணில் விக்கிரமசிங்கவின் ஆயுள் தொண்டன் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் பேசுகிறார், சிறீதரன் பேசுகிறார். ஐ.நா.சபை பேசுகிறது.

இதே சட்டத்தின் துணையால் தமிழ் மக்களின் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிச் சிறுவர்கள் மீது குண்டுகளையும், ஓயாத அலைகள் போரையும் நடத்திய இராட்சசி சந்திரிகா அம்மையார் பேசுகிறார். தமிழ் மக்களுக்கும், மண்ணுக்கும் செய்ய வேண்டிய கருமாதிகளையும் 30 ஆண்டுகளாகச் செய்ததும் அல்லாமல், இப்பொழுதும் தமிழ் மக்கள் மீது செய்து வரப்படும் நிலையில், அதன் இடத்தில் கொண்டு வரப்படும் சட்டம் பற்றிய கவலை இப்பொழுது இவர்களுக்கு ஏன் வரவேண்டும்? சிங்களம் மீது ஐ.ரோப்பிய ஒன்றிய நாடுகள் நீக்கிய தைத்த ஆடைகள் ஏற்றுமதிகள் மீதான வரிச் சலுகைகளை மீளப் பெறும் ஒரே நோக்கத்தைத் தவிர என்ன இருக்கிறது?

2009 தொடக்கம் ஐ.நா.மனித உரிமை ஆணைக் குழுவில் போர்க் குற்ற விசாரணைகளை கூட இடம் பெற விடாமல் தமிழ் இன அழிப்புக்



கொலையாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவரும் தமிழரசுக் கட்சியும், அதன் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இப்பொழுது உருகி உருகி கண்ணீர் வடிப்பது எதற்காக? ஊழல் கறுப்புப் பணத்துக்காகவா, பசப்புப் பாசமாகவா?

இதே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாய்யான தகவல்களின் அடிப்படையில் வழக்கு விசாரணை இல்லாமலே கைதாகி, சிறையில் இருந்த சிலரை விடுவிப்பதாகப் பிரச்சார அரசியல் செய்த சுமந்திரன் மீட்டு எத்தனை தமிழர், தமது அரசியலுக்காகவே செய்யாத, நிரூபிக்கப்படாத குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வைத்து விடுதலை பெற்றுக் கொடுத்தார்? அதுவும் சிங்கள சட்டவாதிகளைத் தமிழ்க் கைதிகளின் பணம் கொடுத்தே விடுதலை வாங்க வைத்தார்? அப்பாவித் தமிழ்க் கைதிகளுக்கு மீனின் தலை. ஐ.நா.சபையில் சிங்களத்துக்கு பாம்பின் வாலைக் காட்டி நடத்தும் அவர்களின் அரசியலைத் தமிழ் மக்கள் எப்போது அடையாளம் கண்டு உயிர் வாழ முடியும்?

தேர்தலில் மக்கள் எதிர்த்து வாக்களித்தாலும், முறியடித்து வெற்றி பெற வைக்கும் வித்தையை இலங்கை அரச அதிகாரிகளும், இலங்கை-இந்திய-பாக்கிஸ்தானிய உளவு அமைப்புகளும் செய்து வரும் நிலையில், இவர்களை எல்லாம் நல்லவர், வல்லவர் என்று சதா ஊடகங்களில் பாடித் துதிக்கும் பச்சோந்திகள் மலிந்து விட்ட நாட்டில் மக்களுக்கு யார் காவல்?

கீழே உள்ள ஊடகச் செய்தி சொல்லுவது என்ன? என்பதைப் பாருங்கள்:- பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இளைஞர் யுவதிகள் விசாரணை இன்றி கைது




செய்யப்பட்டு, நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பதுடன் மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளைக் கொண்ட பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கையெழுத்துப் போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.


குறித்த கையெழுத்துப் போராட்டத்தில், பொது மக்களின் கையெழுத்துப் பெற்று, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கிராமங்கள் தோறும் குறித்த கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவும், த.தே.கூ.தலைவர் இரா.சம்பந்தனும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க கோரி கையெழுத்திட்டனர். இந்த ஊடக நிருபர் நேரடியாக எதையும் பார்த்திருக்க மாட்டார். யாரோ கொடுத்த படத்தையும், கதையையும் வைத்து இப்படி ஒரு கதை அளந்து விட்டிருக்கிறார்.

நாட்டின் நிலை இத்தனை ழ்;மாசமாக இருக்க பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல்வாதிகள் யார் காலடியில் கிடந்தார்கள்? என்ன செய்தார்கள்?



தேவன்

# கிழக்கு மாகாணத்தின் பேரழிவின் பின்னணியில் இசுலாத்தைப் பின்பற்றும் தமிழர்கள்


No. 62. Tamby's shop. Kandy.

இலங்கையில் எங்கெங்கே முஸ்லிம்கள் வணிக அளவில் மேம்பட்டு நிற்கிறார்களோ, அங்கெல்லாம் சிங்களம் அவர்களை அழிக்க முயன்ற வரலாறுகளும், முஸ்லிம்களுக்குள் இருக்கும் பிளவுகளை வைத்தே அவர்களைச் சிங்களம் கையாள்கிறது என்பதனையும், முஸ்லிம்களை வைத்து தமிழர் மீதான விரோதப் போக்கினை சிங்களம் எவ்வாறு உருவாக்கியது? என்பதையும், எவ்வித காரணங்களுமின்றி, சிங்கள இனவெறி அரசோடு இணைந்து தமிழர்களைத் தாக்கும் செயலை ஆரம்பித்ததும் முஸ்லீம்களே என்பதையும், முடிந்த வரையில் மூலக்கூறுகளோடு இணைத்துப் பதிவு செய்திருக்கிறேன்.

இலங்கையில் வாழ்ந்துவரும் முஸ்லிம்கள், இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பதை அடிப்படையாகக் கொண்ட, தனி இனமாகத் தம்மை உரிமை கோருகின்றனர். இலங்கையில் குடியேறிய முஸ்லிம்களைப் பகுதிகளாகப் பிரித்தே அடையாளம் கொள்ளமுடியும். ஒரு பகுதியினர் ஐரோப்பிய காலனித்துவக் காலத்தில் குடியேறிய மூர்ஸ் ***(Moors)*** என்று பதிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கைக்கு வந்த அரேபிய வர்த்தகர்களில், திரும்பிச் செல்லாது தங்கிக் கொண்டவர்களே இவர்களது வேர்களாக இருக்கக்கூடும். ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்து குடியேறியவர்கள் இவர்கள். அரபு குடியேறிகள் பெரும்பாலும் உள்ளூர் மக்கள் மற்றும் சிங்களவர்களுடன் திருமணம் செய்து கொண்டு, தங்கள் பாரம்பரிய நம்பிக்கையையும் தனி அடையாளத்தையும் தக்கவைத்திருக்கிறார்கள்.

மற்றொரு பெரும்பான்மைப் பகுதியினர், ஜாவானிய (ஜாவா, இந்தோனேசியா) வம்சாவளியைச் சேர்ந்த முஸ்லிம்கள், பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் டச்சு குடியேற்றவாசிகளால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களால் இன்றுவரை தேசிய முஸ்லீம் அரசியலில் சிறிதளவு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை என்றும், தங்கள் நலன்களை இன்றுள்ள முஸ்லிம் தலைவர்கள் சிந்திப்பதில்லை என்பதாகவும் உணர்கிறார்கள்.

மூன்றாவதாகக் குறிப்பிடத்தக்க சியைட் ***(Shiite)*** பிரிவின் போரா சமூகமே வணிகத்தில் வலுவாக உள்ளது. இவர்களோடு சிறு அங்கமாக, மேமன் (சுன்னி) சமூகமும் வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறியிருக்கிறது. மூலம் : ***M. A. Nuhman, Sri Lankan Muslims: Ethnic Identity within Cultural Diversity (Colombo, 2007), pp. 24-25.***

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் அடிப்படை விவாதமாக உருவெடுத்தது யாதெனில், இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் தம்மைத் தனித்த இனமாகக் கோருவதா, அல்லது தமிழகத்திலுள்ள முஸ்லிம்கள் போன்று தம்மைத் தமிழினமாகவே கருதுவதா என்பதுவே அது. எவ்வாறாயினும், இலங்கையின் குறிப்பிட்ட அரசியல் சூழல் பெரும்பாலான முஸ்லிம்களிடையே மிகவும் மாறுபட்ட உணர்வை ஏற்படுத்தியது. (இது சிங்களத்திற்கு ஒப்பானதே!. தேரவாத பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சிங்களத்தைப் போல, இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம்கள் ஒரு இனம் என்பதை அவர்கள் வரையறையாக்கிக் கொண்டனர்) மூலம் : ***M. N. M. Kamil Asad, The Muslims of Sri Lanka under British Rule (New Delhi, 1993), p.75***

“ஷரியா” சட்டத்தின் கீழ் குடும்ப விடயங்களில் தீர்ப்பளிக்கக் குவாசி நீதிமன்றங்களைப் பயன்படுத்தும் உரிமையை முஸ்லிம்கள் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டனர். (பெரும்பாலும் ஆணாதிக்கம் மிகுந்ததாகவே இவர்களது சட்டங்கள் இருப்பது வழமை). தேசியப் பாடத்திட்டத்தை விடவும், கூடுதலாக இஸ்லாம் கற்பிக்கப்படும் தனித்தனி (அரசு நிதியுதவி) பள்ளிகளை இலங்கை இஸ்லாமியர்கள் அனுபவிக்கின்றனர் என்பதோடு, இதற்கான நிதியை அரசிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றனர்.

இலங்கையின் மிகப்பெரும் சம்பவமாக 1915 இல் முஸ்லிம்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட வன்முறையில், முஸ்லிம்களது கடைகள், சொத்துகள் சிங்களவர்களால் சூறையாடப்பட்டுக் கொளுத்தப்பட்டது. சிங்களத் தேசியவாதமும், வணிகத்தில் முஸ்லிம்களின் பெரும்பான்மையுமே இந்த வன்முறை உருவாகக் காரணம் என்று சொல்லப்படுகிறது. மூலம் : ***“The 1915 Riots in Ceylon: A Symposium”, Journal of Asian Studies 24, no. 2 (1970),***

1976 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் நிலம் தொடர்பான தகராறுகளால் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான மோதல்களுக்குப் பின்னர் புத்தளத்தில் பல முஸ்லிம்களை இலங்கைக் காவல்துறை சுட்டுக்கொன்றது. அவ்வாறே மாவனெல்ல என்ற இடத்தில் 2001 இல் ஜாதிக ஹெல உறுமய கட்சி, தங்கள் ஐக்கிய சிங்கள வர்த்தகர்கள் சங்கம் (யு.எஸ்.டி.ஏ) மூலம், முஸ்லிம்களை அழிப்பதற்கான கலவரக்காரர்களுக்குப் பண ஆதரவளிப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். மூலம்: ***Now Sri Lankan Muslims under Attack from Sinhalese Nationalists”, Crescent International, 16-31 May 2001, at <http://muslimedia.com/archives/world01/sl-attack.htm>***

முதன்முதலில் சிங்கள இராணுவத்தினரோடு முஸ்லீம்கள் சம்பந்தப்பட்ட, வரலாற்றில் மிகவும் மோசமான நிகழ்வானது 1985 ஏப்ரல் மாதத்தில் நடந்தேறியது. தமிழர்கள் நிறைந்து வாழும் காரைத்தீவு கிராமத்தின் மீது முஸ்லீம் இளைஞர்கள், பாதுகாப்புப் படையினரின் ஆதரவோடு பலரைக் கொன்று, நூற்றுக்கணக்கான வீடுகளை எரித்தனர். சில முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்பிற்கென்று கூறி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆயுதங்களை ஏந்தியிருந்தனர்.

ஆனால், அவர்கள் அயலவர்களாக வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக, முஸ்லிம்கள் விழிப்புணர்வோடு இருக்கவேண்டுமென பரப்புரைகளைத் தொடங்கியதோடு மட்டுமன்றி, தேவையற்ற முறையில் பழிவாங்கும் விதமாகச் செயற்பட்டனர். (தமிழர்களைச் சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்க சிங்களம் மேற்கொண்ட முயற்சிக்கு, முஸ்லீம்கள் எதற்காகத் துணை



போனார்கள்? என்ற கேள்விக்கு இன்றுவரை அவர்களிடம் பதிலில்லை) மூலம் : ***(Crisis Group interview, former government official, Karaitivu, March 2007. , "New Year's Bloody Dawn: Karativu 1985", Northeastern Herald, October/ November 2003.)***

இந்தோ-லங்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வெளியுறவு மந்திரி ஏ.சி.எஸ். ஹமீத் போன்ற அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம்களின் நடவடிக்கைகள், மீண்டும் தங்கள் பிரச்சினைகளையும், பிரதிநிதித்துவங்களையும் புறக்கணிப்பதாக கிழக்கு முஸ்லிம்கள் உணர்ந்தனர். கிழக்கு முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாக்க, தெற்கு முஸ்லிம்களால் முடியவில்லை என்ற கருத்தை இது வலுப்படுத்தியது. ***(F. F. Haniffa,*** சிக்கலான சூழலில் ஒரு நெறிமுறை சுயத்தைத் தேடுங்கள் - தற்கால இலங்கையில் நடுத்தர வர்க்க முஸ்லிம்கள் ***(PHD*** ஆய்வுக் கட்டுரை, கொழும்பு பல்கலைக்கழகம், 2007) மூலம்: ***Middle Class Muslims in Contemporary Sri Lanka (Ph.D Dissertation, University of Colombo, 2007***

1990களில், ***SLMC*** (அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ்) ஒரு அரசியல் சக்தியாக வளர்ந்தது. அதன் பாராளுமன்ற இடங்களைப் பயன்படுத்தி கூட்டணிகளை உருவாக்கியது. அதன் வரையறுக்கப்பட்ட வாக்குத் தளத்திற்கு அப்பால் அரசியல் செல்வாக்கைப் பெற்றது.

1994 ஆம் ஆண்டில் இது அரசாங்கத்தில் சேர்ந்ததன் காரணமாக, பொதுச் சேவையில் முஸ்லீம் வாய்ப்புகளை அதிகரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டது. அன்றிலிருந்து இது தனிப்பட்ட சண்டைகள் மற்றும் அரசியல் மோதல்களால் அடிக்கடி உடைவுகளைச் சந்தித்தது. 2000ஆம் ஆண்டில் உலங்குவானூர்தித் திடுநேர்கையில் அஷ்ரப் இறக்க முன்னமேயே, கட்சியைக் கட்டுப்படுத்துவதற்கான அடுத்தடுத்த போர், ரவூப் ஹக்கீம் மற்றும் அஷ்ரப்பின் மனைவி பேரியல் அஷ்ரப் இடையே உருவாகத் தொடங்கியது. இதுவே பல முஸ்லீம் தலைவர்கள் ***SLMC*** யிலிருந்து பிரிந்து சென்று, தங்கள் சொந்த சிறிய அரசியல் கட்சிகளை உருவாக்க வழிவகுத்தது. புதிதாக அமைக்கப்பட்ட ***SLMC*** கட்சி, 1988 வடகிழக்கு மாகாண சபை தேர்தலில் விடுதலைப் புலிகளின் கோரிக்கையும், புறக்கணிப்பையும் மீறி போட்டியிட்டது.

அஷ்ரப்பின் மரணத்தைத் தொடர்ந்து ***SLMC*** யின் சர்ச்சைக்குரிய தலைமை ரவூப் ஹக்கீமுக்குக் கொடுக்கப் பட்டது. ஆனால் 2002க்குப் பிறகு, ஹக்கீம் தலைமையானது மேலும் மோதல்கள் மற்றும் குறைபாடுகளுக்கு வழிவகுத்தன. அமைதிப் பேச்சு வார்த்தையில் முஸ்லிம்களுக்கு தனிப் பெரும்பான்மையை வெல்லமுடியாத ஹக்கீம் அவர்கள் தலைமைக்குப் பொருத்த மற்றவர் என்று விமர்சித்த பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம். அதாவுல்லா, ***SLMC*** கட்சியை விட்டு வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து, பேரியல் அஷ்ரப் ***SLMC*** உடன் இணைந்த ஒரு கட்சியான, தேசிய ஒற்றுமை கூட்டணியைத் தோற்றுவித்து (என்.யு.ஏ) அதற்குரிய தலைவரானார். முஸ்லீம் அரசியற் கட்டமைப்பினுள் உள்ள பிளவுகளே ஆளுமையற்ற, செயற் திறனற்ற நிலைக்குக் காரணமாக இருந்தன. அதேபோல ஒட்டுமொத்த அரசியல் மூலோபாயத்தின் பற்றாக்குறையும் காரணமாக இருந்தது. "முஸ்லிம்களை ஒன்றிணைத்துச் செயற்படக்கூடிய ஒருங்கிணைந்த கொள்கைகள் எதுவும் இப்போதைய முஸ்லீம் தலைவர்களுக்கு இல்லை. அதுவே அவர்களைப் பிரிப்பதை எளிதானதாக்குகிறது" என்கிறார் சமூகச் செயற்பாடுகளில் அதிமதிப்புப் பெற்ற முஸ்லீம் சமூக ஆர்வலர் ஒருவர். மூலம் : ***Crisis Group interview, Colombo, February 2007.***

தனித்த தூதுக்குழு என்று எதுவுமில்லாததால், முஸ்லிம் தலைவர்கள் விடுதலைப் புலிகளுடன் நேரடியாக பேச முயன்றனர். 13 ஏப்ரல் 2002 அன்று, எஸ்.எல்.எம்.சியின் ரவூப் ஹக்கீம், பிரபாகரன் மற்றும் பிறருடன் சந்திப்புகளைக் கொண்டிருந்தார். இதன்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு முஸ்லிம்கள் திரும்புவதற்கான உரிமை, கிழக்கில் முஸ்லீம் வணிகத்திற்கான பாதுகாப்பை உறுதிசெய்தல், முஸ்லிம்கள் அவர்களின் நிலங்களுக்கு மீளத்திரும்புதல்

ஆகியவற்றை உறுதிசெய்து, இரு தரப்பும் ஒரு குறிப்பிடத்தக்க ஒப்பந்தைச் செய்து கொண்டனர். தாய்லாந்தில் நடந்த இரண்டாவது சுற்று அமைதிப் பேச்சுவார்த்தையில் (31 அக்டோபர் - 3 நவம்பர் 2002), வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள முஸ்லீம் உரிமையாளர்களுக்கு நிலம் மற்றும் சொத்துகளைத் திருப்பித் தருவதாக புலிகள் அறிவித்தனர். மூலம் : ***M. I. M. Mohideen, "Sri Lanka Peace Process and the Muslim Question", in Kumar Rupesinghe (ed.), Negotiating Peace in Sri Lanka (Foundation for Coexistence, Colombo, 2006), vol. II, p. 323***

காத்தான்குடியை முஸ்லீம் அடையாளங்கள் கொண்ட நகராக மாற்றுவதில் அதாவுல்லா பெரும் பங்காற்றினார். முஸ்லிம்களுக்கு இது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கக்கூடும். எவ்வாறாயினும், ஒருதலைப்பட்சமான ஆதரவுத்தளம் என்ற குற்றச்சாட்டுகளை இவ்வாறான செயற்பாடுகள் தூண்டக்கூடும். அதாவுல்லர் தனது சொந்த கிராமத்திற்கு மட்டுமே அதிகளவில் அக்கறை காட்டுவதாகவும், தனது மாவட்டத்தை ஆதரிப்பதாகவும் கல்முனைக் குடியிருப்பாளர்கள் (முஸ்லிம்கள்) யூலை 2005 இல் எதிர்ப்புத் தெரிவித்தனர். தமிழர்கள் இதை இன்னும் மோசமாக உணர்கிறார்கள், முஸ்லீம் பிரதிநிதிகள் தங்கள் தேவைகைளைப் புறக்கணித்து, தங்கள் சமூகத்திற்கு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்வதாக தமிழ் மக்கள் கவலை தெரிவித்தனர். மூலம் : ***Kalmunai Muslims protest against SL Minister Athaulla", Tamilnet, 29 July 2005.***

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, காத்தான்குடியில் வசிக்கும் 34,749 பேரில் 77 பேர் மட்டுமே தமிழர்கள்.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

பொருளாதாரப் பலத்தில் சிறந்து நிற்கும் முஸ்லிம்கள், தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர் அல்லது சட்ட விரோதமாக வாங்கியதாகக் கூறுகின்றனர். கடந்த காலங்களில் தமிழர்களில் கணிசமானோர், தொடர்ச்சியான இடப்பெயர்வுக்கு ஆளானார்கள். இதற்கான பொறுப்புக்கூறல் பெரும்பாலும் அரசாங்கத்தின் கைகளில்தான் இருக்கிறது என்ற போதிலும், அவர்களுடைய கிராமங்கள் பல வறிய நிலையில் உள்ளதற்கானக் காரணம், அங்கே முஸ்லீம் அமைச்சர்கள் பொறுப்பில் இருப்பதே காரணமாகும்.

இதன் விளைவாக, முஸ்லிம்கள் பெரும்பாலும் தமிழர் நிலத்தை மிகவும் குறைந்த விலைக்கு வாங்க முடிந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இதுபோன்ற விற்பனை ஒப்பந்தங்கள் அநேகமாக சட்டபூர்வமானவையாக இருந்தபோதிலும், அதன் மூலமான மனக்கசப்பு ஒரு போதும் நீங்குவதில்லை. காரணம்; முன்பு தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தில், ஒரு தொழிலாளியாக வேலை செய்வதைத் தாங்கிக் கொள்ள இயலாத மனோநிலையில் தமிழர்கள் இருந்தனர். மூலம் : ***Crisis Group interview, Colombo, February 2007.***



அன்புச் செல்வன்





# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

தமிழ் ஈழம் இந்தியாவுக்கோ, வேறெந்த நாட்டுக்கோ சொந்தமோ, கொத்தடிமையோ இல்லை என்பதைச் சொல்லத் தயங்காது, காலம் எல்லாம் சொல்லவும் செய்யும். உலக வல்லரசாயினும், பிராந்திய வல்லரசாயினும் ஐரோப்பாவில் சுவிற்சர்லாந்து நாட்டைப் போன்று தனித்தும், தனித்துவமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியத் தனித் தமிழ் ஈழம் விளங்கும், விளங்க வேண்டும் என்பதே இத்தொடரின் முழக்கம். கடந்த 28.02.2022ல் ஐ.நா.வின் மனித உரிமை ஆணையம் தேவையான அனைத்து பூர்வாங்க செயற்பாடுகளுக்கும் அடிக் கோலிடும் என நம்புவோமாக.

ஈழத் தமிழர்களின் 1830இல் ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, போரில் தமிழரசர்களான சங்கிலியனாலும், பண்டார வன்னியனாலும் ஆளப்பட்டு, தமிழர் இழந்து போன தமிழ் ஈழம், மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டமைக்கப் பட்டு உருவான தனித் தமிழ் ஈழம் உலக அங்கீகாரம் பெறத் துடித்த நிலையில், 40க்கும் அதிகமான உலகநாடுகளின் சுயநல வேட்டைக்குப் பலியாகி 2009இல் இன அழிப்புப் போரினால் நிர்மூலமாக்கப் பட்டமை அண்மைக் கால உலக வரலாறு.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நடந்தது இன அழிப்புப் போரல்ல, உலகப் பயங்கரவாத்துக்கு எதிரான போர் என வாதாடி வந்த உலக நாடுகள் பல இன்று, மனமாற்றம் காண வேண்டிய கட்டாயத்தைக் காலம் உக்கிரெயின் நாட்டின் மீது படை எடுத்த உருசிய நாட்டின் அரசியல் தேவைகளும், காரணிகளும். தமிழ் ஈழத்துக்கும், இந்திய அரசுக்கும் அப்படியே பொருந்திக் காணப்படுவதை இன்று உலகமே கவலையோடு ஏற்று, மறுபார்வைக்கு உட்படுத்தி செய்த பாவத்திற்குப் பிராயச் சித்தமும், பரிகாரமும் தேட வேண்டிய கட்டாயத்தைக் காலம் உருசிய - உக்கிரேனியப் போர் ஏற்படுத்தி விட்டது.



இந்தப் படம் உக்கிரேயின் நாட்டின் மீது உருசியா தொடுத்த குண்டுத் தாக்குதலின் போது வெளியான காட்சி. இதனைத் தொடர்ந்து பல போர் விமானங்களின் அணிகள் நடத்திய குண்டுத் தாக்குதல், மிகப் பெரும் மனித அவலத்தைக் கருங்கடல் பிரதேசம் கண்டு வருகிறது. இதனுடன் ஒப்பிட வேண்டிய இலங்கைத் தமிழர்கள் மீது நடத்திய தமிழ் இன அழிப்புப் போரின்

பொழுது வெளியான இலட்சக் கணக்கானக் காட்சிகளில் ஒன்றான இக்காட்சியை, நாம் நினைவு கூர்வது எப்படியான உலகப் போர்களின் மத்தியில் இந்த உலகம் சிக்கித் தவிக்கிறது? என்பதை மறக்காமல் நினைவில் கொள்ள வேண்டிய கட்டாயத்தை எமக்கு உணர்த்துகிறது.



**இவர்கள் யார்? இவர்களுக்கும் தமிழீழ மண்ணுக்கும், மக்களுக்கும் உள்ள உறவு என்ன?**

இவை போன்ற எத்தனையோ கோரக் காட்சிகளைத் தமிழீழ மண் தன்னுள் புதைத்து வைத்துள்ளது. தன்னால் ஜீரணிக்க முடியாத இவை போன்ற காட்சிகளை, நீதி தேவதை தன் கட்டப்பட்ட கண்களுக்குள் மறைக்க முடிந்த உலகிலே, இவர்களைப் போன்ற கொடுங் குற்றவாளிகள் மனிதர்கள் மத்தியில் புனிதர்களாக போற்றப்படும் அவலத்தை இன்னமும் இவ்வுலகம் காண்பித்து வருகிறது.

இவர்கள் யார்? இவர்களுக்கும் தமிழீழ மண்ணுக்கும், மக்களுக்கும் உள்ள உறவு என்ன? இவர்களால் அழிக்கப்பட்ட உயிர்கள், உடமைகள் அள்ளிச் சென்ற அபகரிக்கப்படும் மண்ணின் கனிம வளங்கள் யாருக்குச் சொந்தம்? என்கிற கேள்விகளுக்குக் கடந்த 12 ஆண்டுகளாக மானுடம் பொறுப்பைக் கேட்கிறது. ஆனால் இவற்றை இவர்களே மறுக்கிறார்கள், மறைக்கிறார்கள், மறைத்தார்கள்.

இவர்களை எல்லாம் கேக் நகரில் உள்ள சர்வதேசப் போர்க் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி ஈழ மண்ணுக்கும், மக்களுக்குமான நீதியை நிலை நாட்டுவோம். உரக்கச் சொல்வோம் உரிமையை வெல்வோம்.



கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**கொரோனா கொரோனா எண்டு அலைஞ்சவனெல்லாம் இப்ப போர் போர் எண்டுகொண்டு திரியுறான். நாங்கள் என்ன பேசவேணும் எண்டதைக்கூட நாங்கள் முடிவு செய்யுறதில்லை. அதைக்கூட வேறுயாரோதான் முடிவு செய்கிறான் பாருங்கோ.**

இரசியாவும் உக்கிரையுனும் சண்டை எண்ட உடன, பொங்கிவழியுற மனிதாபிமானிகள் எல்லாம் 2009 இல எங்கட சனத்தை சிறிலங்கன் வகைதொகையில்லாமல் கொன்று குவிக்கேக்க எங்க இருந்தவையள் எண்டு தெரியேல்லை பாருங்கோ. "உனக்கு வந்தால் இரத்தம் எனக்கு வந்தால் தக்காளிச் சாறு" எண்ட நிலைமை தான் பாருங்கோ. அது அண்டைவீட்டான் சமாச்சாரம் தானே பாருங்கோ. எங்களால ஒண்டும் செய்யமுடியாது கண்டியளோ. நாங்கள் சொல்லி எவனும் கேக்கப்போறதில்லை, போரும் நிக்கப்போறதில்லை.

எங்கட சனமே நாங்கள் சொல்லுற விடயங்களைக் கேக்குறதில்லை, ஆனாலும் நாங்களும் காலம் காலமாக சொல்லிக்கொண்டு தானே இருக்கிறம் பாருங்கோ. விசயம் என்னவெண்டா பாருங்கேர் காலம் காலமாக எங்கட சனத்துக்கு ஒரு பழக்கம் இருக்கு. பிறருக்கு நல்லா அறிவுரையள் சொல்லுவினம், ஆனால் தாங்கள் அதைக் கடைப்பிடியாயினம் பாருங்கோ. அதே அறிவுரையை அவைக்குத் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாயினம் கண்டியளோ.

விசயம் என்னவெண்டா பாருங்கேர் வெளிநாடுகளுக்கு வந்த எங்கட ஆக்கள் பல தொழில்களிலையும் வியாபிச்சிருக்கினம் பாருங்கோ. அதால பெரிய பெரிய முதலாளிமாரெல்லாம் உருவாகியிருக்கினம் எண்டது மகிழ்ச்சி தான் பாருங்கோ. ஆனால் அவையள் எங்கட இனத்துக்கே செய்யுற சில வேலையள் தான் சகிக்க முடியேல்லை கண்டியளோ.



உதாரணத்துக்கு ஒரு யூதன் முதலாளி எண்டால் அவன் தன்ர இனத்தவனைத் தொழிலாளியா தன்னட்ட வேலைக்கு அமர்த்தினால், அவனையும் சேர்த்து முன்னேற்றப் பார்ப்பான் கண்டியளோ. ஒரு பிரெஞ்சுக்காரன் இன்னொரு பிரெஞ்சுக் காரனை அடிமையா வைச்சு கசக்கிப் பிழிய மாட்டான் கண்டியளோ. ஆனால் சில தமிழ் முதலாளிகள் தாங்கள் வேலைக்கு வைச்சிருக்கிற தமிழ் ஆட்களை படாத பாடு படுத்துகினம் கண்டியளோ.

எனக்குத் தெரிஞ்ச பெடியொண்டு ஒரு தமிழ் முதலாளியிட்ட வேலைக்குப் போகுது கண்டியளோ. ஐயோ அந்தப்பெடி சொன்ன விசயங்களைக் கேட்டால் பெருங்கொடுமை கண்டியளோ. புதுசா வந்த பெடி எண்டதால மொழியறிவும் கொஞ்சம் குறைவாத்தானே இருக்கும். ஆனால் அதையே சாட்டா வைச்சு அந்தப் பெடியை அந்தத் தமிழ்முதலாளி எப்பிடி கசக்கிப் பிழியுறார் எண்டதைத்தான் சொல்லப்போறேன் பாருங்கோ. பெடி இஞ்ச வந்து ஆறு வருசம் ஆகுது. வந்த புதுசில வேலை கிடைக்காமல் அங்கின இங்கின



கிடைச்ச வேலையளைச் செய்து காலம் கடத்தினதாம்.

பிறகு தமிழ் முதலாளி வைச்சிருந்த சாப்பாட்டுக் கடையில வேலை இருக்கெண்டு தெரிஞ்சு அங்க போயிருக்கு. சம்பளம் கொஞ்சம் குறைவுதான் எண்டாலும், ஏதோ கொஞ்சக் காலத்துக்கு வாழ்க்கையை ஓட்டுவம் எண்டு பெடி போயிருக்கு பாருங்கோ. அப்பிடியே வேலைசெய்து கொண்டிருக்கேக்க வதிவிட அனுமதியும் கிடைச்சிட்டுது எண்ட சந்தோசத்திலே பெடி வேற வேலைக்கும் முயற்சி செய்திருக்குது பாருங்கோ.

அது தப்பில்லைதானே. ஐரோப்பிய நாடுகளில விரும்பின வேலைக்குப் போறதும், விரும்பாத வேலையை விடுறதும் தனிமனித உரிமை கண்டியளோ. ஆனால் எங்கட




விடாக்கொண்டன் முதலாளி மார் சிலர் இருக்கினம், அவைக்கு தங்களட்ட வேலை செய்யுற ஆக்கள் காலம் முழுவதும் தங்களுக்கு அடிமையா இருக்கோணும் எண்டுறது எழுதப்படாத விதி எண்டு நினைக்கினம் போல இருக்கு.

வதிவிட அனுமதி இல்லாத காலத்தில சம்பளம் கொஞ்சம் குறைவா குடுத்தாலும் பரவாயில்லை எண்ட நிலையில பெடி வேலைக்குப் போயிருக்கு. ஆனால் வதிவிட அனுமதியும் கிடைச்ச பிறகு பெடி வேறை வேலை தேட ஆரம்பிச்சிருக்கு. அது முதலாளிக்கு எப்பிடியோ காதுக்குப் போட்டுது.

பெடியைக்கூப்பிட்டு, "நான் உனக்கு ஆரம்பத்தில வேலை தந்து அரவணைச்ச நன்றியை மறந்து நீ வெளியில போறது நல்லதோ" எண்டு கேக்க பெடிக்கு இக்கட்டாப் போச்சு பாருங்கோ. சரி இதே சாட்டோட சம்பளத்தை கொஞ்சம் கூட்டிக் கேப்பம் எண்டு பெடி கதைச்சிருக்கு. முதலாளி மகா கில்லாடி. சம்பளம் கூட்டித் தர ஏலாது எண்டால் பெடி வெளிக்கிட்டுப் போயிடும் எண்டதால, சம்பளம் கூட்டிக் குடுக்குறதுக்கு சம்மதிச்சிருக்கிறார்.

ஆனால் அதுக்கு ஒரு வரையறையும் போட்டிருக்கிறார். என்னவெண்டால்; ஒரு குறிப்பிட்ட சம்பளத்தை சம்பளப்பட்டியலில போட்டுத் தாறதெண்டும், மீதியை கையில தாறதெண்டும் கேட்டிருக்கிறார். இஞ்ச சில முதலாளிகள் உப்பிடிச் செய்யுறது வழமை தானே எண்டுட்டு பெடியும் ஓம் எண்டு சொல்லிட்டுது பாருங்கோ.

ஓம் எண்டு சம்மதிச்சு பெடி தொடர்ந்து வேலை செய்ய ஆரம்பிச்சிட்டுது கண்டியளோ. ஆனால் சம்பளப்பட்டியலில போட்ட சம்பளம் வங்கிக்கு வருகுதே தவிர, மேலதிகமாக கையில தாறதெண்டு சொன்னது ஆறு மாதமா வரவேயில்லை. பொறுத்துப் பொறுத்துப் பாத்த பெடி, ஒரு கட்டத்தில முதலாளியிட்ட நேர கேட்டிருக்கு. இரண்டு மாதத்தில மொத்தமாத் தாறன் எண்டு முதலாளி சொல்லியிருக்கிறார். பெடியும் நம்பி காத்திருந்திருக்கு பாருங்கோ.

மேலதிகமாக இரண்டு மாத காலம் போயும், பெடிக்கு எதுவும் வரேல்லை பாருங்கோ. ஒரு நாள் வழமை மாதிரியே பெடி வேலைக்கு போக, அங்க புதுசா ஒருத்தர் நிண்டாராம். ஆரோ வேலைக்கு புதுசா வந்திருக்கினமாக்கும் எண்டு பெடி பேசாமல் தன்ர வேலையைச் செய்ய ஆரம்பிச்சிருக்கு. கொஞ்ச நேரத்தில பாத்தால், உம்மோட கொஞ்சம் கதைக்கவேணும் எண்டு பெடியைக் கூப்பிட்டிருக்கிறார் அந்த புதுசா வந்த நபர்.

என்னடா வந்த உடனே கதைக்க வேணும் எண்டுறார் எண்டு பெடி போனால்; அவர் போட்ட குண்டு பெருங்குண்டு பாருங்கோ. தம்பி, நான் தான் இந்தக் கடையை வாங்கியிருக்கிற புது முதலாளி, உம்மட சம்பளம், வழமையான சம்பளப்பட்டியலில உள்ள சம்பளமாகவே இருக்கும். தொடர்ந்து வேலை செய்ய விரும்புறீரோ இல்லையோ எண்டு கேட்டிருக்கிறார். பெடிக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப்போச்சு பாருங்கோ.

என்ர பழைய முதலாளியோட கதைச்சுப்போட்டு பதில் சொல்லுறன் எண்டு பெடி சொல்லிப்போட்டு தொடர்ந்து வேலை செய்திருக்கு பாருங்கோ. இரண்டாம் நாள் பழைய முதலாளி வந்திருக்கிறார். வந்ததும் வராததுமா, பெடியைப்பாத்து; நீர் என்ன நேற்று கனக்க கதைச்சீராம் எண்டு கேட்டிருக்கிறார். நான் ஒண்டும் கதைக்கேல்லை, புது முதலாளி தான் கதைச்சவர் எண்டு விசயத்தைச் சொல்லி இருக்குது பெடி. அதுக்கு அவரும் புது முதலாளி சொன்ன அதே பதிலைச் சொன்னாராம் பாருங்கோ.

பெடிக்கு ஒரு கட்டத்தில அழுகை வந்திட்டுதாம் பாருங்கோ. அண்ணை; நீங்கள் தானே மேலதிகச் சம்பளத்தை கையில தாறன் எண்டு சொன்னனியள், அதையாவது தாங்கோ, நான் வேற இடம் தேடி போறன் எண்டு பெடி அழாக்குறையாக் கேட்டிருக்குது பாருங்கோ. அதை நான் முடிவெடுக்க ஏலாது, புது முதலாளி தான் முடிவெடுக்க வேணும் எண்டு சொன்னாராம் பழைய முதலாளி.

இதுக்கு மேல அந்தப்பெடியால என்ன செய்ய முடியும் கண்டியளோ? இது பற்றி எங்கயும் முறையிட முடியாது பாருங்கோ. ஏனெண்டால், ஒரு பகுதிச் சம்பளத்தைக் கையில வாங்கச் சம்மதிச்சது பெடியின்ர பிழை.

சட்டத்தாலையும் எதுவும் செய்யமுடியாது பாருங்கோ.

பெடி இப்ப அங்க வேலை செய்ய மனமில்லாமல் வேலையை விட்டு வேலை தேடி அலையுது பாருங்கோ. பாவப்பட்ட தமிழனை, வேற யாரும் மிதிக்கத் தேவையில்லை கண்டியளோ. அதுக்கு எங்கட ஆட்களே போதும். ஒரு தொழிலாளியின்ர வியர்வை காயமுதலே அவனுக்குச் சம்பளம் குடுத்திடவேணும் எண்டது ஏட்டிலே எழுதப்பட்ட வெறும் வாக்கியம் தான் பாருங்கோ.

இப்பிடியான முதலாளியின்ர பரம்பரைக்குப் பழிவந்து சேரும் பாருங்கோ. ஊரார் வயித்தில அடிச்சு சொத்துச் சேர்த்து என்னத்தைக் காணப்போறானுகளோ தெரியா பாருங்கோ. உனக்காகக் கடினப்பட்டு உழைக்கிறவன் கண்ணீரோட திரிய, நீ பளபளப்பா குடும்பம் குட்டியோட திரியுறது வெட்கக்கேடான விசயம் எண்டுறது உனக்கு எண்டைக்கோ ஒரு நாளைக்கு உறைக்கும்.

ஏனெண்டால் காசு எப்ப உன்னட்ட இருக்கும், போகும் எண்டது எவருக்கும் தெரியாது. ஆனால் அதை நியாயமா வைச்சிருந்தால் எப்பவும் உனக்கு மதிப்பும் இருக்கும், வாழ்க்கையும் இனிக்கும். இல்லையெண்டால் பரம்பரை பரம்பரையாக பிச்சை எடுக்கவேண்டிய நிலைதான் வரும்.

எல்லா வசதி வாய்ப்புகளும் உங்களுக்கு உதவாது, எந்த விதத்திலும் ஆறுதல் தராது கண்டியளோ, ஆனால் சில அன்பானவர்களின் முகங்களும் அவர்களது தொழுதல்களும்தான் உங்களை வாழவைக்கும் பாருங்கோ.


அவ்வளவுதான் வாழ்க்கை, யாருக்கும் உதவாத... வெறும் பணம் பதவி அதிகாரம் என்று இருக்கும் மனிதர்களை மிதிக்க வேணும் கண்டியளோ. நல்ல மனித நேயமுள்ள மனிதர்களை மட்டும்தான் நேசிக்கவேணும்.

**ஆளை ஆளு புகழ்வதெல்லாம்**
**பணத்துக்காகத் தான் - பணம்**
**அகன்று விட்டால் புகழ்ந்த கூட்டம்**
**இகழும் உண்மை தான்**
**ஏழ்மை நிலை வந்தால்**
**நேசர் யாரும் இல்லை - இதை**
**எண்ணிப் பார்த்து நடக்காதவன்**
**அடைவான் தொல்லை**

**- அப்ப வரட்டே**


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

கண்ணன்







ஆர்.என்.ராவ்



கிரிஷ் சக்சேனா



சங்கரன் நாயர்

# இந்திராவும், இந்தியாவும்...

தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட *1983 - July* (கறுப்பு யூலை) தமிழினப் படுகொலையானது, தமிழ்நாட்டில் தேசிய எழுச்சியைக் கிளறிவிட்டு, தமிழகத் தமிழர்களை உணர்வு பொங்கச் செய்தது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியம் எழுச்சிப் பிரவாகமெடுத்து, பிரிவினைவாதமாகப் பரிணாமம் பெற்றுவிடுமோ என டெல்லி ஆட்சிப்பீடம் அச்சம் கொண்டது.

தமிழினப் படுகொலையால் எழுந்த பாரதூரமான விளைவுகளின் நிமித்தம், தமிழ் நாட்டில் உருவாகிய கொந்தளிப்பான நிலைமை காரணமாகவே ஈழத் தமிழர் பிரச்சினையில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால், இந்தியத் துணைக் கண்டத்தின் பிராந்திய நலன்களுக்கு எதிராகவே எப்போதும் நிற்கும் இலங்கையில் அரசியல் தலையீடு செய்வதற்குத் தேவையான அளவு வாய்ப்பையும், பொருத்தமான புறநிலைச் சூழலையும், தகுந்த நியாயப் பாட்டையும் கறுப்பு யூலை எனக் குறியிடப்படும் தமிழினப் படுகொலையானது, உருவாக்கிக் கொடுத்தது என்றே கூறலாம்.

இந்திய அரசின் பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையில் கூடிய உயர்மட்ட ஆலோசனைக் குழுவானது, கலந்தாலோசித்தது ஈழத்தமிழர் பிரச்சனையில் தலையிட்டு, தீர்வுக் காண இந்தியா ஆர்வமாய் இருப்பதை உறுதி செய்தது.

தமிழர்கள் மீது சிங்கள அரசு நடத்திவந்த படுகொலைகளைத் தடுத்து நிறுத்தும் முயற்சியை மேற்கொள்வது போல சிறிலங்காவிற்குள் நுழைந்து, சிறிலங்காவின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அம்முயற்சி தோல்வியுற்றால், ஜெயவர்த்தனாவின் இராணுவ அணுகுமுறைப் போக்கை உடைத்தெறிய தமிழ் அமைப்புகளுக்கு இராணுவ உதவி வழங்குவது என இரு முனைச் செயற்திட்டத்தை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் வகுத்தனர்.

நடுநிலை முயற்சியில் சளைக்காமல் ஈடுபட்ட பார்த்தசாரதி சிங்கள - தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்து, நீண்ட கலந்துரையாடல்களை நிகழ்த்தி, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்தார். அத்தோடு, தமிழரின் இனப் பிரச்சினையின் அடிப்படைகளை ஆழமாகப் படித்தறிந்தார். இறுதியாக, மாகாண அடிப்படையில்

பிரதேச வாரியான நிர்வாக கட்டமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் வழங்கும் ***‘Annexure C’*** என்ற தீர்வுத் திட்டத்தை உருவாக்கி அளித்தார். அரச அதிபர் ஜெயவர்த்தனாவும், அவரது மூத்த அமைச்சர்களும் பார்த்தசாரதியின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தனர்.

பகிரங்கமான அரசியல் இராசதந்திரப் பணிக்காகப் பார்த்தசாரதியை அதிகாரப் பூர்வமாக இறக்கிவிட்ட இந்திரா காந்தி அம்மையார் அதே சமயம், மூன்றாவது முகவர் மூலமாக இரகசியமான இராணுவப் பயிற்சித் திட்டத்தையும் முடுக்கி விட்டார்.

தமிழ் விடுதலை அமைப்புகளுக்கு இராணுவ உதவி வழங்கும் இரகசியத் திட்டத்திற்கு மூவர் அடங்கிய குழு ஒன்றே பொறுப்பாகச் செயற்பட்டது. (இந்திய பாதுகாப்பு, புலனாய்வு நிறுவனங்களில் உயர் பதவி வகித்த ஆர்.என்.ராவ், கிரிஷ் சக்சேனா, சங்கரன் நாயர் ஆகிய இம் மூவர் அடங்கிய குழுவை ‘மூன்றாவது ஏஜென்சி’ என அழைப்பர்)

தீவின் இறையாட்சிக்கும், பிரதேச ஒருமைப் பாட்டிற்கும் பங்கம் ஏற்படாதவாறு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களின் எண்ணமாக இருந்தது.

இருப்பினும், தமிழரின் தேசியப் போராட்டத்திற்கு, ஒரு தார்மீக வலுவைக் கொடுத்த இந்திய தலையீட்டுக்கு பின்னர் ஈழத்தமிழர்கள் மீது சிங்கள அரசு மேற்கொண்டு வந்த இனப்படு கொலையை வைத்து அரசியல் செய்ய முயன்ற இந்திய ஆட்சி பீடத்தின் முயற்சி, இராணுவ பூகோள முப்பரிமாணங்களைக் கொண்ட விவகாரமாக மாறியது.

இந்தச் சூழ்நிலையின்தான் எவருமே எதிர்பாராத அதிர்ச்சி தரும் வரலாற்றுச் சோகமான நிகழ்வு இடம்பெற்றது. 1984 அக்டோபர் 31ஆம் நாள் தனது மெய்ப் பாதுகாவலரால் சுடப்பட்டுக் கொல்லப்பட்ட இந்திரா காந்தியின் திடீர் மரணம் ஈழத் தமிழினத்தை ஆழமான சோகத்தில் ஆழ்த்தியது. கடைகள், பாடசாலைகளை மூடி, வீடுகள் எங்கும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு தமிழீழ மக்கள் துக்கம் கடைப்பிடித்தபோது, தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமித்து நின்ற சிங்களப் படையினர், வீதிகளில் நடனமாடி மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வானது இந்திய-இலங்கை உறவிலும், தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திரா காந்தி அம்மையார் கடைப்பிடித்து வந்த நட்புறவுக் கொள்கைக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், புதுடெல்லியில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம் அமைந்தது.

தமிழர்களது பூர்வீக நிலமான தமிழீழத்தை, அடக்குமுறை அரசிடம் இருந்து மீட்டெடுப்பதற்காக நீண்டகாலமாக அறவழியில் போராடித் தீர்வுகளேதுமற்ற நிலையில், ஆயுத வழியில் போராட ஆரம்பித்த



தமிழ்ப் போராளிகளுக்கு, இராணுவப் பயிற்சி வழங்க இந்திய அரசு முன்வந்தமை பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தில் கவர்ந்து இழுத்ததுடன், தமிழீழத் தாயகத்தில் தேசிய எழுச்சியையும் விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையையும் பிறக்கச் செய்தது.

தமிழீழ விடுதலை இயக்கம், புளொட், ஈரோஸ், ஈ.பி.எல்.ஆர்.எப். உள்ளிட்ட போராளி குழுக்களுக்கு இரகசியமாக ஆயுத பயிற்சி அளிக்க சம்மதித்தது. இதற்காக உத்திரப்பிரதேச மலைப் பிராந்தியத்திலுள்ள 'டெக்ரா டன்' என்னுமிடத்தில் காட்டுப் பகுதியில் முகாம்கள் அமைக்கப் பட்டன. அங்கு போராளி இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டன. முதலில் புறக்கணிக்கப் பட்ட புலிகள் இயக்கம் அன்டன் பாலசிங்கம் அவர்களின் தொடர் முயற்சியால் இதில் இணைக்கப்பட்டது.

நிலப் படங்கள் வரைதல், கண்ணி வெடிகளைப் புதைத்தல், வெடி பொருட்களைப் பாவித்தல், சிறுரக ஆயுதங்களிலிருந்து, கனரக ஆயுதங்கள் வரை பலவிதமான ஆயுதங்களைக் கையாளுவது பற்றிய பயிற்சிகள் இந்திய அரசால் வழங்கப் பட்டன.

வட இந்திய பயிற்சி முகாம்களை மட்டுமே நம்பியிராமல், தமிழ்நாட்டின் சேலம், கொளத்தூர், திண்டுக்கல் சிறுமலை போன்ற இடங்களில் அமைந்த அடர்ந்த காட்டுப் பகுதிகளில் புதிதாகப் பயிற்சிப் பாசறைகள் புலிகளால் நிறுவப்பட்டன. தமிழ்நாட்டில் பெரும் மக்கள் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழீழ விடுதலைப்

புலிகள், தங்களது அமைப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தாமே முன்நின்று பயிற்சிகளை வழங்கினர். இரகசிய முகாம்களுக்கு இந்திய இராணுவத்திடம் பயிற்சி பெற்ற மூத்த தளபதிகள் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டனர்.

விடுதலைப் போராட்டத்திற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய உறுதியான ஆதரவும், கோடிக் கணக்கில், அவர் வழங்கிய நிதியுதவிகளும் புலிகள் அமைப்பின் அபார வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் அத்திவாரமாக அமைந்தது. பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி, அழகிரிசாமி, ஈரோடு சுப்புலட்சுமி, ஜெகதீசன் காளிமுத்து,

கோவை ராமகிருஷ்ணன், ஆறுச்சாமி, பெங்களூர் சண்முகசுந்தரம், பழ.ராமசாமி உள்ளிட்டவர்கள் இந்த பயிற்சி முகாம்கள் நடைபெற போதிய இடம், உணவு, உறைவிடம், உடுப்பு என தேவையான அத்தனை பணிகளையும் செய்து பேருதவியாக இருந்தார்கள்.


## இந்திய - இலங்கை ஒப்பந்தம்

"ஜெயவர்த்தனாவின் ஏமாற்றுகிற, சூழ்ச்சி மிக்க வஞ்சகக் குணவியல்பு பற்றி எவ்வளவோ சொல்லியும் ராஜீவ் காந்தியை நம்ப வைக்க முடியவில்லை. ஜெயவர்த்தனாவின் வஞ்சகமான உள்நோக்கத்தை ராஜீவ் காந்தி சரியாக எடை போடத் தவறிவிட்டார். மேலாண்மைவாதக் கருத்தியலில் மூழ்கிப் போய் கிடக்கும் சிங்கள அரசியற் தலைமை, தமிழர்களுக்கு நீதி வழங்கப் போவதில்லை. சமாதான வழி மூலமாக இந்திய அரசு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுத்தால், தமிழ் மக்கள் என்றும் இந்தியாவுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள்."

**– கோபாலசாமி பார்த்தசாரதி**

*பிரதமர் இந்திரா காந்தியின் முன்னாள் மூத்த ஆலோசகர், இந்திய வெளியுறவுக் கொள்கையை வகுப்பாளர்.*

"உலகத்தின் மிகப் பெரிய சனநாயக நாடும், தென்னாசியாவின் வல்லரசுமாகிய இந்தியாவின் உயர் பதவியில் ராஜீவ் காந்தி அமர்த்தப்பட்டார். தமிழர்கள் தொடர்பான பிரச்சனையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு தீர்வைக் கொண்டு வந்தால், அதன்பின் பிராந்திய மற்றும் கேந்திர நலன்களை இதன்மூலம் இந்தியா உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என ஜே.ஆர். ஜெயவர்த்தனே ஆசை காட்டினார். இதனையடுத்து, தனது புதிய ஆலோசகர்கள், நண்பர்களின் கருத்துகளுக்கு வசப்பட்டு, இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவர முனைந்தார்.



அரசியல் முதிர்ச்சியற்ற இந்நடவடிக்கைகளால் இந்திய-இலங்கை உறவில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த மாற்றங்கள் தமிழீழ மக்களின் நலன்களை

# BCN TRAVELS (REISEBÜRO)

## Consulting Network.ug

(Travels-Business-Worldwide)

RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS

International Monye Transfers

Ria Worldwide Money Transfer

small world Money Transfer

Last Minute Tickets avaliable on Sunday and Holidays

Tel : 01638714369

Flugtickete und hotel kann man auch hier buchen

Rheinische str-72
44137 Dortmund

023110876360
023110876361
Fax : 023110876362

bcntravels@hotmail.de

*People's Insurance*
*Covid19 Insurance*

Health Declaration Form
Ministry of Health - Sri Lanka

SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA

AIR FRANCE
Lufthansa
الطيران العماني OMAN AIR
QATAR AIRWAYS القطرية
एयर इंडिया AIR INDIA
BRITISH AIRWAYS

www.bcn-travels-dortmund.com

ஆழமாகப் பாதித்தன. 1983 ஆம் ஆண்டு முதல், 1987 ஆம் ஆண்டு வரை நீடித்த இந்தியாவின் அரசியல் தலையீடு, இப்போது ஓர் நடுநிலை விவகாரமாக மாறியது.

தமிழ் விடுதலை இயக்கங்களுக்கும், இலங்கை அரசுக்கும் மத்தியில் 1985 ஜூன் நடுப்பகுதியில் போர் நிறுத்தத்தைச் செயற்படுத்துவது என்றும், இந்திய அரசின் கண்காணிப்பின் கீழ் மூன்றாம் நாடான இமாலய இராச்சியமான பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில், ஜுலை நடுப்பகுதியில் பேச்சுகளைத் தொடங்குவது எனவும் இந்திய அரசால் முடிவு எடுக்கப்பட்டது. இரண்டு கட்டங்களாக நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை சிங்கள இனவெறி அரசின் சதியால் தோல்வியைச் சந்தித்தது.

இதனைத் தொடர்ந்து 15.11.1986 அன்று பெங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் ராஜீவ் காந்தியும் - ஜெயவர்த்தனாவும் சந்தித்து, இலங்கைப் பிரச்னை குறித்து விவாதித்தார்கள். அப்போது இருவரும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, பிரச்னைக்குத் தீர்வுக் காணும் முடிவுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. தமிழ் பிரதிநிதிகள், சிங்கள அரசு ஆகிய இரு தரப்பினர் இடையே கையெழுத்திடப்பட வேண்டிய ஒப்பந்தம் இந்திய - இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தமாக இறுதி வடிவம் பெற்றது.

தமிழீழத் தமிழர்கள் மீது சிறிலங்கா நடத்தி வந்த இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களையோ, அவர்களின் பிரதிநிதிகளையோ சம்பந்தப்படுத்தாமல், அவர்களின் விருப்பங்களையும், உரிமைகளையும் கண்டுகொள்ளாமல் போடப்படுகிற ஒப்பந்தமாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 அமைந்தது."

**- ரோஹனா குணவர்த்தனா**

(இண்டியன் இண்டர்வென்ஷன் இன் ஸ்ரீலங்கா)

"நகரெங்கும் எதிர்கட்சியினரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட உச்சகட்ட வன்முறை தலைவிரித் தாடியது. சிங்களவர்களின் தரப்பில் சீற்றம் வெளிப்பட்டது. தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட படுகொலைகளைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக கொழும்பு நகர் முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமலானது. டெல்லி அசோகா விடுதியில் தலைவர் பிரபாகரன் உள்ளிட்டோர் சிறை வைக்கப்பட்ட நிலையில், முரண்பாடுகள் நிறைந்த, பிரச்னைகளின் வடிவிலான இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானது.

## திம்பு பேச்சுவார்த்தை - 1985

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, 1985 ஆம் ஆண்டு ஜூலை 13அன்று திம்பு பேச்சுவார்த்தையின் முதல் கட்டம் முடிவடைந்த நாளில், தமிழ் தூதுக்குழுவினர் (ஈழத் தேசிய விடுதலை முன்னணி) திம்பு பிரகடனம் என்ற பெயரில் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். 'தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு அர்த்தமுள்ள தீர்வுகாண விரும்பினால் கீழ்காணும் நான்கு முதன்மையான அம்சங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்' என அவர்கள் அந்த திம்பு பிரகடனத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.

## திம்பு பிரகடனம்

இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஒரு அடையாளம் காணப்பட்ட தாயகம் உண்டென்பதை அங்கீகரிக்க வேண்டும். தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். இலங்கை வாழ் அனைத்து தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களது குடியுரிமையையும் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழ்த் தூது குழுவில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), ஈழ மாணவர் புரட்சியமைப்பு (ஈரோஸ்), தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (புளொட்), தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (டி.யூ.எல்.எப்.), தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.இ) ஆகிய அமைப்புகள் அங்கம் வகித்தன.


தமிழ்த் தூது குழுவினரின் கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது. திம்புப் பேச்சுவார்த்தையின் அடிப்படை சாரமான போர் நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக சிங்களப் படைகள் மீறின. திருகோணமலையிலும், வவுனியாவிலும்

சிங்களப் படைகள் நடத்திய தாக்குதல்களில் 200-ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

சமாதானப் பேச்சு என்ற போக்குக் காட்டிக் கொண்டே தான் சேர்த்து வைத்திருந்த ஆயுதங்களைப் பெருமளவில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தது இலங்கை அரசு. இந்த ஆயுதங்கள் முதன்முதலாக வான்வழித் தாக்குதலுக்குப் பயன்படுத்தப் பட்டன. இதன்காரணமாக முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் பெருவாரியான மக்கள் உயிருக்கு அஞ்சி, ஏதிலிகளாக நாட்டைவிட்டு வெளியேறினர். இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.

### ராஜீவ் காந்தியை தாக்கிய சிங்களப் படைவீரன்

இந்தியா திரும்ப இருந்த ராஜீவ் காந்திக்குக் கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட இருந்தது. ராஜீவ் காந்தி அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு வருகையில், கடற்படையைச் சேர்ந்த விஜயமுனி விஜித ரோகண டி சில்வா என்கிற சிப்பாய், தான் பிடித்திருந்த துப்பாக்கியின் அடிக்கட்டையால், ராஜீவ் காந்தியின் பின்தலையில் வேகமாகத் தாக்க முயன்றார். பின்தலையில் தாக்கினால் ஒரு மனிதன் செயலிழப்பான் என்பது ராணுவப் பயிற்சியில் சொல்லிக் கொடுக்கப்படும் சூத்திரங்களில் ஒன்று. இவ்வாறு சிங்களச் சிப்பாய் தாக்குவதை உணர்ந்த ராஜீவ் காந்தி தலையைக் குனிந்து கொண்டு, அப்பால் நகர்ந்தார். துப்பாக்கியின் அடிக்கட்டை அவரது தோளில்பட்டது.



ராணுவ உயர் அதிகாரிகள், ஜெயவர்த்தனாவின் சகாக்கள் முன்னிலையில்தான் இச்சம்பவம் நடைபெற்றது. ஆனால், ராஜீவின் பாதுகாப்பு அதிகாரிதான் ஓடோடிச்சென்று அந்தச் சிங்களச் சிப்பாயை இயங்கவிடாமல் பிடித்து அமுக்கினார்.

சிங்களப் படையினர் எத்தகைய கொடூரமான மனநிலையினர் என்பதையும், கொலைவெறி மிகுந்தவர்கள் என்பதையும் இச்சம்பவம் உலகத்திற்கு அடையாளம் காட்டியது. ராஜீவ் காந்தியை அணிவகுப்பின் போது தாக்கிய விஜயமுனி பிற்காலத்தில் பிரேமதாசா அந்நாட்டின் அதிபராக வந்ததும், நிபந்தனை ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டார். இந்த அணிவகுப்பு மரியாதைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா என்பது குறிப்பிடத்தக்கது. ராணுவ அணிவகுப்பில் ராஜீவ் காந்தி தாக்கப்பட்ட விடயத்தில் ஜெயவர்த்தனா அரசு கண்டும், காணாமலும் இருந்த போக்கு விடையில்லாத புதிர்களாக இன்றுவரை தொடர்கின்றன.



GGS FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

## தியாக வழியில் போராடி உயிர் நீத்த திலீபன்

*"ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் இந்தியாவின் குறைபாடுகளை எதிர்த்து, 15.09.1987 அன்று விடுதலைப் புலிகளின் போராளியான திலீபன், சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கிய போது, யாழ்ப்பாணம் முழுவதும் அறப்போராட்டங்கள் நடைபெற தொடங்கின. ஆனால், புதுடெல்லி இந்த சிக்கலைக் கையாளும் பொறுப்பை இந்திய ராணுவத்திடம் ஒப்படைத்தது. இறுதியாக 26.09.1987இல் திலீபன் சாவடைந்த பொழுது, புலிகளுக்கும், இந்தியப் படையினருக்குமான உறவு மேலும் கசப்படைந்தது."*

**- கேணல் கரிகரன்**

*இந்திய அமைதிப்படையின் உளவுப் பிரிவு உயரதிகாரி 'த சண்டே இந்தியன்' 25.01.09*

*ஈழத் தமிழ் மக்களினன் உரிமைகளைக் காப்பாற்றும் நோக்கில், இந்திய அரசு மற்றும் இந்திய மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவப் போராளியான திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கையிலெடுத்தார்.*



## திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்

*1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.*

*2. 'புனர்வாழ்வு' என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களவர் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.*

*3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.*

*4. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போலீஸ் நிலையங்கள் திறப்பதை உடனே நிறுத்த வேண்டும்.*




5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோர்க்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெற்று தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள ராணுவ, போலீஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

அண்ணல் காந்தி, ஐரிஷ் நாட்டுப் போராட்ட வீரன் பொபி சாண்ட்ஸ், பொட்டி ஸ்ரீராமலு போன்றோர் நீராகாரம் அருந்தித்தான் உண்ணாவிரதம் இருந்ததாகப் படித்திருக்கிறோம். ஆனால், திலீபன் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாத உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படாததால் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அன்று தொடங்கிய உண்ணாவிரதப் போராட்டம், பனிரெண்டாம் நாள் 26.09.1987 ஆம் தேதி அன்று அவரது சாவில் முற்றுப்பெற்றது. தமிழீழ பகுதியே கொந்தளித்தது. எந்த மக்கள் ஆரத்தி காட்டி, இந்திய ராணுவத்தை வரவேற்றார்களோ, அதே ராணுவத்திற்கு எதிராக அறவழிப் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர்.



## கொடிய தமிழின அழிப்பை நடாத்திய அமைதிப் படை

ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனே அரசாங்கங்களுக்கு இடையில் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து, இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்தியப் படையினர் இலங்கைத் தீவின் தமிழர் தாயகப் பிரதேசத்தில் காலடி வைத்தனர். விரைவிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்த இந்திய படையினர், பொதுமக்களுக்கு எதிராக பல அநீதிகளையும் இழைத்தார்கள். இந்தியாவின் படை நடவடிக்கைகளின் போது அவர்கள் மேற்கொண்ட பரந்தளவிலான பொதுமக்களின்

## இந்தியப் படையினர் செய்த படுகொலைகள்
**[1987 முதல் 1989 வரை]**

| | |
|---|---|
| பிரம்படி பொற்பதிப் படுகொலை | - 12.10.1987 |
| புதுக்காடுச் சந்திப் படுகொலை | - 11.10.1987 |
| யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலை | - 21, 22.987 |
| அராலித்துறைப் படுகொலை | - 22.10.1987 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி | - 24.10.1987 |
| அளவெட்டி அக்கிரமம் | - 26.10.1987 |
| சாவகச்சேரி சந்தைப் படுகொலை | - 27.10.1987 |
| மூளாய் மருத்துவமனைப் படுகொலை | - 05.11.1987 |
| நெடுங்கேணி சந்திப் படுகொலை | - 11.11.1987 |
| மட்டக்களப்பு பொதுச்சந்தை படுகொலை | - 12.12.1987 |
| கத்தார் சின்னக்குளம் படுகொலை | - 07.01.1989 |
| வல்வைப் படுகொலை | - 2, 3, 04.08.1989 |

படுகொலைகளிலும், அநீதிகளிலும் ஒரு சிறு பகுதியே பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் பெண்கள் மீதான பெருந்தொகையான பாலியல் வல்லுறவுகள் இந்த கொடூரங்களின் அடங்கும்.

*- NESOHR*

(வடக்கு கிழக்கு மனித உரிமைகள் தொடர்பான செயலகம் ஆவணத்தில் இருந்து)

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் இந்தியப் படைகள் (10 ஆயிரம் வீரர்களைக் கொண்ட 4வது, 36வது, 54வது, 57வது படைப்பிரிவுகள்) வெளியில் சொல்ல முடியாத பல அட்டூழியங்களைச் செய்தது. ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறிய இந்திய அமைதிப் படை, தமிழர்களின் வீடுகளில் தேடுதல் என்று அத்துமீறி நுழைந்து, ஆண்களைக் கைது செய்து சித்ரவதை புரிவது, பெண்களை பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கிக் கொல்வது போன்ற கொடிய இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

அங்கு நடைபெறும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த செய்திகள் வெளியே போகாமல் தடுக்க இலங்கை தமிழனத்துக்காக வெளிவந்த ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் டி.வியின் அலுவலகங்கள் குண்டு வைத்து இந்திய ராணுவத்தால் தகர்க்கப்பட்டன. தமிழரின் சொத்துகள் பெருமளவு அழிக்கப்பட்டன.

புலி ஆதரவாளர்கள் யார், யார்? என முதலில் தேட ஆரம்பித்தவர்கள், மாலையிட்டு வரவேற்ற தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர்.

பெருந்தொகையான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தியாவைத் தமது பாதுகாவலராகப் பூசித்துவந்த தமிழீழ மக்களுக்கு இந்திய இராணுவம் இழைத்த கொடுமைகள் ஆழ்ந்த அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. தமிழர்களின் பூர்வீக நிலத்தையும், அவர்களது சுயநிர்ணய உரிமையையும் பெற்றுத் தரவே தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகள் ஆயுதம் தரித்து நிற்பதாகக் கூறி (இந்திய - இலங்கை உடன்பாட்டை எதிர்த்தும்) தென்னிலங்கையில் ஒரு கொந்தளிப்பான நிலைமை சிங்கள இனவெறியர்களால் உருவாக்கப்பட்டது.

அதேவேளையில், இலங்கை மண்ணில் இந்தியப் படைகள் ஆக்கிரமித்து நின்றதை எதிர்த்து ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் குதித்தது.

1988ஆம் ஆண்டில் ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிப்பீடம் ஏறியதை அடுத்து, அவர் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, இந்தியப் படைகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு வேண்டினார்.

இறுதியில், வி.பி.சிங் அவர்கள் இந்தியப் பிரதமராகிய வேளையில், தமிழக முதல்வர் கலைஞரின் நெருக்கடியால் இலங்கையிலிருந்து இந்தியப் படைகளைத் திருப்பி அழைக்க இந்திய அரசு முடிவெடுத்தது. 1990 மார்ச் 31ஆம் தேதியன்று இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் படை முழுவதுமாக இலங்கை மண்ணைவிட்டு வெளியேறின. அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறி, தமிழகம் வந்தடைந்த போது அரசு வெளியிட்ட கணக்கின்படி இந்திய ராணுவ வீரர்கள் 1,115 பேர் இறந்து போயிருந்தார்கள். ஆனால், இதைவிட பத்து மடங்கு அதிகமாக ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்திருந்தது இந்தியாவின் அமைதி காக்கும் படை.

இந்தியப் படைகள் புரிந்த கொடுமைகள், அந்தக் கொடுமைகளை நேரில் கண்டவர்களின் சாட்சி விபரணைகள், பாலியல் வன்முறைக்கும், சித்திரவதைகளுக்கும் ஆளானோரின் வாக்குமூலங்கள், பாதிக்கப்பட்டோரின் உறுதி ஆணைப் பத்திரங்கள், கொடுமைகளைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் ஆகியன அடங்கிய நூல்கள் தமிழர் தரப்பினரால் வெளியிடப் பட்டன. இதன் காரணமாக சர்வதேச அளவில் மோசமான கண்டனக் குரல்கள் எழுந்தன.




**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்**
**உணவுப்பொருட்களை மொத்தமாக**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

StaR-Impex




## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena – Since 1986 – We've Mastered Taste
Aachi – The Mother of Good Taste
BTM
Double Horse – Bringing Health to Life


பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

TRS – Asia's Finest Foods



MDH · Laziza International · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · Aroy-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila



சண் தவராஜா

# இலங்கை நிலவரம்



# குரங்கின் கைப் பூமாலை

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து உள்ளது சிறிலங்கா. இரண்டு வருடங்களையும் கடந்தும் நீடிக்கும் கொரோனாப் பெருந் தொற்றின் தாக்கத்தால், உலகளாவிய அடிப்படையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது உண்மையே!. இருந்தும் தமது வாண்மையினாலும், அரசியல் திறத்தினாலும், மக்களின் உதவியைக் கொண்டு ஒருசில அரசாங்கங்கள் அத்தகைய பொருளாதார நெருக்கடியைச் சமாளித்துள்ளன. சில நாடுகள் முன்னைய வளர்ச்சிப் பாதைக்கு மீண்டிருக்கின்றன. ஆனால், சிறிலங்காவோ மீள முடியாத அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்றது. ஆட்சியாளர்களின் அறியாமையும், அசமந்தப் போக்கும், அறிவியல் பூர்வமற்ற அணுகுமுறைகளுமே இந்த நிலைமைக்குக் காரணம் என்பது சொல்லாமலேயே புரியும்.

விவசாய நாடாக அறியப்பட்ட சிறிலங்காவில், அரிசி, பருப்பு முதல் அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தோடு எரிபொருள் பற்றாக்குறையும் இணைந்து கொண்டுள்ளது. போதாக் குறைக்கு மின்சாரத்தைக் கூடக் கிரமமாக மக்களுக்கு வழங்க முடியாத நிலையில், மின்வெட்டும் அமுல்படுத்தப் பட்டுள்ளது. ஓரிரு மணித்தியாலமாக இருந்த மின்வெட்டு, தற்போது பல மணித்தியாலமாக உயர்ந்துள்ளது. போகிற போக்கில் நாட்கணக்கில் மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மின்வெட்டு, எரிபொருள் பற்றாக்குறை என்பவை பொருட்களின் விலையேற்றத்துக்குப் பங்களிக்கக் கூடியவை என்பதால், எதிர்வரும் நாட்களில் பொருட்களின் விலையேற்றம் மேலும் அதிகமாக இருக்கும் என நிச்சயம் நம்பலாம். மறுபுறம், மக்களிடம் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் இல்லாமல் உள்ளது. இரண்டு வருடங்களாகத் தொடரும் கொரோனாப் பெருந்தொற்று பொதுமக்களைப் பல வழிகளிலும் பாதித்துள்ள நிலையில், பொருட்களின் விலையேற்றம் வேறு வாழ்க்கையையே வெறுக்கும் நிலைக்கு மக்களை உந்தித் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

கோதுமை மா விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக, யாழ்ப்பாணத்தில் பாண் உற்பத்தி பாதிக்கப்படக் கூடும் என அண்மைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது. ஏழை மக்களின் உணவாக உள்ள பாணுக்கே தட்டுப்பாடு ஏற்படுமானால், சாதாரண மக்களின் வாழ்க்கை எவ்வளவு கடினமாக மாறும்? என்பதைக் கற்பனை செய்யக் கூட முடியாமல் உள்ளது.

கொரோனா பரிசளித்த மன அழுத்தம், தொழில் இழப்பு காரணமாக உருவான விரக்தி, உறவுகளைப் பறிகொடுத்த சோகம், நீண்டகாலமாக வீட்டுக்குள் அடங்கிவாழ வேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக உருவான உளச் சோர்வு, பசி, பட்டினி எனத் தொடரும் துயர்மிகு வாழ்க்கை மனிதர்களை விரக்தியின் விளிம்புக்கே தள்ளிச் செல்கின்றது.

இதன் நீட்சியாகத் தற்கொலை மரணங்களும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. எந்தப் பக்கம் திரும்பினாலும் 'இருள்' என்ற நிலையே உள்ளது. வளமான எதிர்காலம் தொடர்பான அறிகுறிகள் எவையுமே தென்படவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் யுத்தத்தின் வடுக்களில் இருந்தே இன்னமும் மீட்சி பெற்றிராத நிலையில், யுத்த காலத்தில் தாம் அனுபவித்த வறுமையை ஒத்த நிலையை மீண்டும் அனுபவிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் கோரிக்கைகளைக் கேட்பதற்கோ, பதிலளிப்பதற்கோ யாருமே இல்லாத நிலை நீடிக்கின்றது.

திசை தெரியாமல் பயணிக்கும் கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டைக் கெடுத்தான்' என்ற பாணியில் சகல விடயங்களையும் கெடுத்து, நாட்டைக் குட்டிச்சுவராக ஆக்கியுள்ளது. சிறிலங்காவைச் சிங்கப்பூராக மாற்றிக் காட்டுவேன் எனச் சூழுரை செய்து பதவிக்கு வந்த ராஜபக்ச சகோதரர்கள், முடிவில் சிறிலாங்கவை சோமாலியாவாக ஆக்கி விட்டே ஓய்வோம் எனச் சபதமெடுத்துச் செயற்பட்டு வருவது போலத் தெரிகின்றது.

அந்நியச் செலாவணி வருகை இல்லை, டொலர் கையிருப்பில் இல்லை, ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கானத் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கே கடன்பெற வேண்டிய நிலைமை. இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான கட்டணத்தைச் செலுத்த முடியாமை என அரசின் துயரம் தொடர்கிறது. புதிதாகப் பதவியேற்ற பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச 'மந்திரத்தால் மாங்காய் வீழ்த்துவார்' எனப் பரப்புரை செய்தபோது, அதைக் கூடச் சிலர் நம்பினர். அவரால் கூட எதுவும் செய்ய முடியவில்லை எனத் தெரிந்தபோது நொந்து போயினர். ஒரிரு தடவை இந்தியாவுக்குப் பயணம் போய் வந்ததும் அவரும் ஓய்ந்து போயினார்.



எந்தப் பக்கம் போனாலும் முட்டுச் சந்து என்றால், என்னதான் செய்வது? என்ற நிலையில் சிக்கிக் கொண்ட அரசாங்கம், தனது கோபத்தை இரண்டு அமைச்சர்கள் மீது காட்டியுள்ளது. 'திருமணத்தை நிறுத்த சீப்பை எடுத்து ஒளித்து வைப்பது' என்ற நகைச்சுவையை இது நினைவுபடுத்துகிறது. விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையில் இருந்து நீக்கியுள்ள அரசுத் தலைவர் 'அரசாங்கத்தில் இருந்து கொண்டே அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு இடமில்லை' என வீராவேசமாகப் பேசியுள்ளார். அவருக்குத் தெரிந்த ஜனநாயகம் அவ்வளவே!. அவரைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவருக்கு தெரிந்த எல்லாமே அரைகுறையானவையே! அரசியல் உட்பட. அதனை இந்தப் பதவி நீக்க விடயத்திலும் நிரூபித்திருக்கின்றார்.

விமல் மற்றும் உதய ஆகியோர் ஒன்றும் மக்கள் நலன் சார்ந்து சிந்திப்பவர்கள் இல்லை என்பதும், கடைந்தெடுத்த இனவாதிகள், அரசியல் சந்தர்ப்பவாதிகள் என்பதுவும் வேறு விடயங்கள். ஆனாலும், அவர்களுக்கு அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை உள்ளமையை மறுதலித்துவிட முடியாது. 'நேற்று அவர்களுக்கு, நாளை நமக்கு' என்பதை உணராமல் ஆளுங் கட்சியில் உள்ள பலர் நடந்துகொள்வதைப் பார்க்கையில் கவலையே ஏற்படுகிறது.

நாட்டில் நிலவும் மக்கள் அதிருப்தியைப் பயன்படுத்தி, ஆட்சி மாற்றத்துக்கு வழிசெய்ய முடியாமல் எதிர்க்கட்சியும் உள்ளது. இதைவிடவும் அருமையான சந்தர்ப்பம் எதிர்க்கட்சிக்கு இன்னொரு முறை கிட்டுமா? என்பதும் தெரியவில்லை. மொத்தத்தில், சிறிலங்கா மக்களின் வளமான எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு செயற்பாடும் அரசாங்கத் தரப்பிலிருந்து முன்னெடுக்கப்படும் அறிகுறி தென்படவில்லை என்பதே இன்றைய நிலை. ஆட்சியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் ராஜபக்ச சகோதரர்கள், தங்கள் குடும்பத்தின் நலனை மாத்திரமே சிந்தித்துச் செயற்படும் தற்போதைய நிலை நீடிக்கும்வரை இதுவே சிறிலங்காவின் நிலையாக இருக்கும். இந்நிலையில், பாவம் மக்கள் என்று சொல்வதை விட வேறு என்னதான் செய்வது?

Smt. லிதியா மயூரன், சுவிஸ்



# பரதம் பயில்வதின் பலன்

ஆய கலைகள் 64. இக்கலைகளில் தரணி எங்கும் போற்றப்படும் கலை நாட்டிய கலையே!. தமிழர் தொல்கலைகளில் முக்கியமானதொன்று பரதக்கலை.

இக்கலை மனிதனின் முயற்சிக்கு வெற்றியாக அமைந்தது. நாட்டியத்தின் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை இயற்கையாகவே நமக்கு கிடைக்கின்றன. இது ஒரு தெய்வீகமான கலை. இதன்மூலம் குருபக்கதி, தெய்வபக்தி, பெரியவர்களை கணம் பண்ணுவது, பொறுமை, தன்னடக்கம் ஆகிய உயரிய குணங்களை அவர்கள் அறியாமலே பெறுகிறார்கள். சிறப்பான ஒரு சமூகத்தை உருவாக்கும் சக்தி பெற்றது.

நாட்டியத்தைப் பயில்வதால் உள்ளமும், உடலும் வலுப் பெருகின்றது. ஒவ்வொரு அங்கங்களும் தனியாக இயங்கப் பெற்று சிறந்த ஆரோக்கியத்தைப் பெறுகின்றது. பலவிதமான நோய்களில் இருந்து உடலானது காப்பாற்றப்படுகிறது. உடலின் தேவையற்ற சதை வளர்ச்சியைக் குறைப்பதுடன், தேவையானதை அதிகரிக்கச் செய்கிறது. உடலைக் கட்டுகோப்பாக வைத்திருக்கவும் உதவுகிறது.

இக்கலை கற்பதால் எம் கலாசாரத்தையும், எம் மொழியையும் பேணிப் பாதுகாக்கின்றோம். இக்கலை ஆடுபவர்களையும், பார்ப்பவர்களையும் பரவசத்தில் ஆழ்த்தி, கவலைகளை மறக்க செய்யும் அற்புதமான சக்தி வாய்ந்த கலை. இக்கலையால் இறைவனைக் காணலாம். இக்கலை பிரம்மதேவனால் ஐந்தாம் வேதமாக அருளப்பட்டது.

மேலைதேச நாடுகளில் பரதநாட்டியதின் வளர்ச்சி

ஆடல், பாடல் என்பன வேதகாலம் தொட்டு, இறை வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது. 64 கலைகளில் தலைசிறந்த எல்லோராலும் விரும்பிய கலை நாட்டியக்கலை. இவற்றின் தோற்றுவாய் ஆலயமே!. இயல், இசை, நாடகம் என்பது முத்தமிழ். இம்மூன்றையும் வளர்த்த பெருமை தமிழுக்கு உண்டு.

தென்னிந்திய தமிழ் மக்களின் தனி பெரும் கலை பரதநாட்டியம். ஒரு சமூகத்தின் வளர்ச்சியைக் கணிப்பிடுவது, மறுமலர்ச்சியத்தைத் தொடர்ந்து மேலைத்தேச நாடுகளில் இக்கலை புலம் பெயர்ந்ததால், இங்கு அக்கலைகள் வளரத்தொடங்கியது. தமிழ் மாணவர்கள் மட்டுமில்லாமல், மேலைதேச, பிறமொழி பேசும் மாணவர்களும் பயில தொடங்கினார்கள். இதன் சிறப்பைத் தனித்துவத்தை அம்மக்கள் உணர்ந்தார்கள்.

மேலதேச நாடுகளில் ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக நகரசபைகள், தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது.

மேலைத்தேச நாட்டவர்களின் நிகழ்வுகளிலும், எங்களது பரத கலையை மேல்நாடார்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கலைஞர்கள் ஆற்றுகைக்கு அழைக்கப்படுவதோடு, கௌரவிக்கவும் படுகிறோம். மேலதேச நாடுகளில் இக்கலை அதிக அளவில் மதிக்கப்படும் கலையாகத் திகழ்கிறது, இதை நான் ஒரு நடன ஆசிரியாக உணருகிறேன்.

### மேலைத்தேச கீழைத்தேச நடனங்களின் ஒற்றுமையும், வேற்றுமையும்

**ஒற்றுமை :** இரண்டு கலைகளும் மனதிற்கு ஆத்மதிருப்தியைக் கொடுப்பவை. காலப்பிரமாணம் இரு கலைகளிலும் இருக்கின்றது. இருகலைகளிலும் கலைஞர்களின் கலைத்திறனும், அர்ப்பணிப்புத் தன்மையும் இன்றியமையாதது. இருகலைகளுக்கும் ஆர்வமும், கடின பயிற்சியும் தேவை. இரண்டும் கட்டுக்கோப்புக்குள் அடங்கியது. இரண்டிலும் ஆடுபவர்கள் பாத்திர லட்சத்துக்குரியதாக இருப்பது விரும்பக்கூடியது. இரண்ட்டிற்கும் கற்பனை சக்தியும், உருவாக்கும் திறனும் தேவை.

**வேற்றுமை :** கீழைத்தேச நாட்டியத்தில் தலையிலிருந்து, கால்வரை அலங்காரம் உண்டு. மேலைத்தேச நடனத்தில் இவை முக்கியமில்லை. கீழைத்தேச நடனத்தில் நவரசங்கள் பாவிக்கப்படுவதுபோல், மேலத்தேச நடனத்தில் திடமான முகபாவங்கள் இல்லை. கீழைத்தேச நடனத்தில் முத்திரை பிடிப்பது திடமாக இருக்கும். மேலத்தேச நடனத்தில் இயல்பாக இருக்கும்.



கீழைத்தேச நடனத்தில் வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், பாடு, வீணை போன்ற பக்கவாத்தியங்கள் வாசிகப்படும். மேலத்தேச நடனத்தில் பியானோ, கிட்டார், வயலின், றம்ஸ் போன்றவை உபயோகிக்கப்படும். கீழைத்தேச நடனம் தெய்வீகமான உணர்வை உடையது. மேலத்தேச நடனத்தில் இவ்வகை உணர்வு இல்லை.

**அடுத்த அகரம் இதழில் நடராஜரின் திருக்கோல விளக்கம் பற்றி பார்ப்போம்.**




# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்

“உள்ளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.



தலை சாய்த்து
நித்திரை கொள்ளத்
தோள் கேட்கிறாய்.
சரி தருகிறேன்
விழித்திருக்கும்
காதலை
என்ன செய்வாய்?

நீண்ட மௌனத்தை
மெல்ல உடைத்தது
நம்மைக் கடந்துபோகும்
வண்ணத்துப்பூச்சி

அப்படி ஒன்றும்
பெரிதாக எதுவுமில்லை
சிம்பொனி இசையில் - உன்
சினுங்கலுக்கு முன்னால்

துளித்துளியாய்
பருகிச் சுவைக்கிறேன்.
தேநீர் குவளையில்
நீ நிரப்பி வைத்துப் போன
தீர்ந்து போகாத அன்பை

● **நந்தவனம் சந்திரசேகரன்**



***காதலர்கள்!..***

கடற்கரையில் உடைந்த படகு
தேடுவாறற்றுக் கிடக்கிறது
தேடி ஓடி வருகிறார்கள் - காதல்
மொழி பேசும் காதல் சோடிகள்!..



***இசை!..***

நெருப்புச்சூடு வேண்டிய
அழகான மூங்கில் மரம்
இனிய ராகம் மீட்டியது
புல்லாங்குழல் கானம்!..



***விடுதலை!..***

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை
இப்போ கொள்ளையர், காமுகர்,
மதவெறியர், சாதிவெறியர்
கைகளில் மாட்டிக்கொண்டோம்!..

***மனிதர்கள்!..***

கடலில் சீவியம் தேடும் மீனவர்கள்
விரட்டி அடிக்கும் படையினர்
கரை சேராத
படகுகளும், வலைகளும்
காணாமல் போகும் மனிதர்கள்!..

● **வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**



# அகர கவிக்களம்....

## உயிர்ப்பு...



உண்மை நோக்கிய தேடல்
உருவங்களிடம்
தன்னை இழந்து போகிறது.
இறந்த காலம் பாடமாக
இலட்சியம் எதிர் காலமாக
போராட்டம்
நிகழ்காலமாக தொடர
வாழ்க்கை உயிர்ப்புடன்
இருக்கிறது இன்னமும்...

## ஆன்மீகம்..

உள்ளுணர்வுக்கும்
மனச்சாட்சிக்கும் இடையே
எப்போதும் ஓர்
அறிவுசார் முரண்பாடு
இருந்து கொண்டுதான் இருக்கிறது
வலியும் இன்பமும் நிறைந்த
பாதையை பின்பற்றுமாறு
உள்ளுணர்வு கேட்கிறது
ஆனால் சரியும் தவறும்
நிறைந்த பாதையை
பின்பற்றுமாறு மனச்சாட்சி
வலியுறுத்துகிறது

இதை தவிர்த்து
நீ அமைதியான நிலையில்
வாழ தொடங்கினால்
உன்னுள் இருக்கும்
ஆன்மீகம் மகிழ்வுடன்
வாழ வைக்கும்....

பாமினி



## விடியல்

துன்பங்கள் துயரங்கள்
நிரந்தரமானவை அல்ல
ஒவ்வொரு புதிய நாளின்
விடியலிலும் அவை
கரைந்து கொண்டே போகின்றன.

பெண்ணே நீ பெருமை கொள்
ஏன் என்றால் நீ இன்றி இவ்வுலகில்
ஏதும் இயக்கமில்லை.

## காதல்

நீயும் ஒரு விஷம்தான்
அன்பான அமுத விஷம்
கொஞ்சம் கொஞ்சமாய் என்னுள்
நுளைந்து என்னை கொள்ளும்
அன்பு கலந்த விஷம்

## போதை

இந்த உலகில் மிக கொடுமையான
போதை எது தெரியுமா
(நாம் நேசிக்கும்) நம் மனதிற்கு
பிடித்தவர்களின்
பாசத்திற்கு ஏங்கி தவிப்பதுதான்.

## துரோகம்

ஒருவனிடம் மிக மோசமான குணம்
என்னவென்றால்
ஒருவரை தப்பாக சித்தரித்து
பிறரிடம் கூறிவிட்டு
ஒன்றுமே தெரியாதது போல்
நல்லவன் வேஷம் போடுவது.

நந்து



# Radio - by - Phone

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

## 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

பாகம் : 24

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

## தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

# மீளெழுச்சி

பின்னடைவு என்பது, நாட்டு மக்களின் உளவியலில் ஆழமான பாதிப்பை உருவாக்குகிறது. சப்பான் இரண்டாம் உலகப்போரில் சரணடைந்த அதிர்ச்சியில், பல சப்பானியர்கள் அதைத் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர். பல அறிவுசீவிகள் மாதக்கணக்கில் அழுது புலம்பியிருக்கின்றனர். நடைப்பிணமாக இருந்திருக்கின்றனர். இதைப்போன்ற உளவியல் தமிழ்ச் சமூகத்திலும் 2009 இற்குப் பின்னர் காணலாம். இவை எல்லாம் ஒரு தேசம் தனது இழப்பில் எதிர்நோக்கும் உளவியல்.

ஆனால், இந்த உளவியல்தான் அம்மக்களை இழப்புக்கான காரணங்களை ஆராய வைத்து, கற்று, நாட்டுக்கான எதிர்கால முன்னேற்றத்திற்கானப் பாதையில் பயணிக்க வைக்கிறது. ஒவ்வொரு சமூகமும் வெவ்வேறு விதமாக தோல்வியை சந்தித்தாலும், அவர்களது உளவியல், பண்பாடு, அரசியல் எதிர்வினை என்பது பொதுவாக ஒரே மாதிரியாகவே அமைகிறது. இந்த எதிர்வினையை "தோல்விப் பண்பாடு" ***(Culture of defeat)*** என்று முதன் முதலில் ஆராய்ந்து தத்துவப்படுத்தியவர் உல்ஃபுகேங்கு சுகைவெள்வேசு என்ற வரலாற்று ஆய்வாளர்.

என்னுடைய பார்வையில் இது இழப்புக்குப் பின்னரான எழுச்சியாக இருப்பதால் இதை "மீளெழுச்சிப் பண்பாடு" என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். இவ்வாராய்ச்சியின் அடிப்படையில் பின்னடைவைச் சந்தித்த நாடுகள் எவ்வாறு செயல்படுகின்றன? என்பதையும், அதன் அடிப்படையில் நமது செயல்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன? எவ்வாறு இருக்கவேண்டும்? என்பதையும் பார்ப்போம்.

### கனவுநிலை (Dreamland)

எந்த நாடும் போரில் தோல்வி என்பதை நினைத்துக் கூடப் பார்க்காது. அதனால் தோல்வி ஏற்படும்பொழுது அது மக்களின் மனதில் உளவியல் ரீதியாக, பரவலாக பாரிய மன அழுத்தத்தை உருவாக்குகிறது. உலகம் இடிந்து விழுந்தது போன்ற உணர்வு ஏற்படும். நினைத்துக்கூட பார்க்க முடியாத கனவு நிலையில் மனம் இருக்கும். அதுபோன்ற நிலையில் முதல் எதிர்வினை என்பது, துரோகிகளை அடையாளம் கண்டு, அவர்களைத் தூக்கி வீசுவது. பொதுவாக அவர்கள் துரோகிகளாக அடையாளம் காண்பது அவர்களின் அன்றைய ஆட்சியாளர்களைத்தான். அவர்கள்தான் தோல்விக்கு முழு காரணம் என்று முத்திரை குத்தப்படுவார்கள்.

ஒரு உள்நாட்டு புரட்சி வெடிக்கும், பழைய அரசு தூக்கி வீசப்பட்டு புது ஆட்சியை மக்கள் உருவாக்குகிறார்கள். பழைய அரசின் சிலைகளையும்,



சின்னங்களையும் அடித்து நொறுக்குவார்கள். புதிய அரசை அமைத்தவுடன் தோல்வியை மறந்து, ஒரு வெற்றி மனநிலையை அடைந்து கொண்டாட்டங்கள் வெடிக்கும். எதிரியைக்கூட துரோகிகளை அடையாளம் கண்டு நீக்க உதவிய நண்பனாக மக்கள் பார்ப்பார்கள்.

உதாரணமாக பிரான்சு யேர்மனியிடம் 1871 போரில் தோற்ற நிகழ்வு, இது போன்ற கனவுநிலையை உருவாகியது. தோற்ற இரண்டு நாட்களில் பழைய அரசைக் கவிழ்த்து, புதிய அரசை மக்கள் உருவாக்குகிறார்கள். அதேபோல யேர்மனி 1918 முதல் உலகப்போரில் தோற்ற உடனே மன்னராட்சி கவிழ்ந்தது. அரசர் நாடு கடுத்தப்பட்டார். பழைய அரசுகள் இலஞ்சம், ஊழல், சோம்பேறித்தனம், சுயநலம் கொண்டு பணமும், இன்பமும் தான் குறிக்கோள் என்று நினைத்து, உயர்ந்த எண்ணங்களை மறந்து போனது என்று குற்றம் சாட்டப்பட்டது. பிரான்சு மக்கள் "நல்லவேளை யேர்மனியிடம் தோற்றோம், இல்லையென்றால் இந்த கேடுகெட்டவர்களைத் தூக்கி வீசியிருக்க முடியாது" என்று எண்ணினர். அதேபோல முதல் உலகப்போரின் முடிவில் யேர்மனி மக்களும் நினைத்தனர்.

இந்த மாற்றங்கள் இரு நாடுகளிலும் பெரிய கொண்டாட்டங்களை உருவாக்கியது. இவை மக்களுக்கு நாட்டை மீட்டு விட்டோம் என்று நம்பிக்கை அளித்து, மன அழுத்தத்திலிருந்து வெளியேற்ற துணை





புரிகிறது. வரலாற்றில் இதுபோன்ற கனவுநிலை என்பது பொதுவாக சில வாரங்களில் இருந்து, சில மாதங்கள் வரை இருக்கும். அமெரிக்க தெற்கில் மட்டும் இரண்டு வருடங்கள் நீடித்தது.

2009 இனவழிப்பிற்கு காரணமாக முக்கிய துரோகியாக திமுகவும், கருணாநிதியும் அடையாளப் படுத்தப் பட்டார்கள். துரோகம், ஊழல், சுயநலம், குடும்ப அரசியல், பனமோகம், உயர்ந்த இலக்கின்மை என அனைத்து குற்றங்களும் திமுகவின் மீது 2009 இற்கு முன்னர் இருந்தே உள்ளது. திராவிட இயக்கத்தில் இருந்தவர்களே திமுகவை துரோகியென குற்றம் சாட்டினர்.

போராட்டம் வெடித்தது, ஆனால் திமுகவை நீக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணங்களாக நான் நினைப்பது, தமிழ்த் தேசிய எண்ணங்கள் மக்களிடம் பொதுவாக இல்லை, அதற்கான அடித்தளம் கட்டப்படவில்லை. குறைந்த அளவு மக்களிடம் மட்டுமே அவ்வாறான எண்ணங்கள் இருந்ததால், அது பெரிய இயக்கமாக மாற முடியவில்லை. அவ்வாறு திரண்டவர்கள் இணைந்து "நாம் தமிழர்" அமைப்பு திமுகவிற்கு எதிராக உருவானது.

கனவுநிலை எவ்வளவு காலம் நிற்கும்? என்பது மக்களின் உளவியல் பாதிப்பைப் பொறுத்தே இருக்கும். ஆரம்பத்தில் கனவு நிலையில் இருந்த பலர், இன்று பழைய நிலைக்கு திமுகவிற்கே திரும்பி விட்டனர். அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் திமுகவை

நீக்குவதுதான் இலக்கு என்று உறுதியாக நிற்கின்றனர்.

பழைய அரசுகளை வீழ்த்துவது முக்கியமானது. ஏனெனில் அவை இல்லாமல் புதிய மாற்றங்களை உருவாக்க முடியாது. கற்றலின் முதற்படி என்பது பழமையை நீக்கி, புதிய அடித்தளத்தை அமைப்பதுதான். அதுதான் வரலாற்றில் தோல்விகளைச் சந்தித்த நாடுகள் செய்யும் முதற்பணி. இதை எவ்வளவு விரைவில் செய்கிறோமோ, அவ்வளவு விரைவில் முன்னேறுவோம்.

ஈழத்தில் 1976-இல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் கூட ஒரு கனவுநிலை என்று கூறலாம். அமைதி வழியில் மக்களாட்சி தேர்தல் வழியில் அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்தன. அந்தத் தோல்வியை உணர்ந்து, அரசியல் தலைமைகள் அமைதியான வழியில் தலைமைப் பொறுப்பை ஆயுதப் போராட்டத்தை நடத்தும் இளைஞர்களிடம் கையளித்தது. அது ஒரு புதிய பாதையை உருவாக்கி, பாரிய பாய்ச்சலை உருவாக்கியது. அவ்வாறு அரசியல் தலைமைகள் செய்யா விட்டாலும், இளைஞர்களே அவர்களைத் தூக்கி வீசியிருப்பார்கள். கனவு நிலையில்தான் புதிய பாதைகள் பிறக்கின்றன. வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்றும் கொண்டாடப் படுகிறது.

### விழிப்பு / நீதி கோரல் (Awakening)

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கனவுநிலை கலைந்தபின், தேசம் நீதி வேண்டி நிற்கும். எதிரிகளிடம் நீதியான முறையில் நடந்து கொள்ளுமாறு கேட்கும். நடுநிலையில் இருக்கும் நாடுகளை நீதி பெற்றுத்தர கேட்கும். நீதி கொடுக்காமல் மாறாக தோற்ற நாட்டின் மீது போருக்கான நட்ட ஈடும், போருக்கான பொறுப்பு கூறலும் கேட்டால், தேசம் முதுகில் குத்தப்பட்டதாக உணரும். முதலில் உள்நாட்டு அரசு முதுகில் குத்தியது. இப்பொழுது எதிரிகளும், மற்ற நாடுகளும் குத்துகிறார்கள் என தேசம் உணரும்.

யேர்மனி முதல் உலகப்போரின் பின்னர், அமெரிக்க சனாதிபதி ஊடுரோவ் வில்சன் நீதி பெற்றுத்தருவார் என நம்பியது, ஆனால், வெர்சாயி ஒப்பந்தம் மூலம் யேர்மனியிடம் போருக்கான நட்ட ஈடும், மேலும் பல கட்டுப்பாடுகளையும் விதித்தது. அதேபோல பிரான்சு 1870-இல் யேர்மனியிடம் நீதியை எதிர்பார்த்தது, ஆனால் யேர்மனி-பிரான்சின் ***Alsace-Lorraine*** பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது.

இன்று நாமும் அது போன்ற நிலையிலே இருக்கிறோம். வருவோர், போவோர், எதிரி, நண்பன், துரோகி, ஐநா என எல்லோரிடமும் நீதி கேட்டாகி விட்டது. மாறாக சுதந்திரப்



போராளிகளுக்குத் தீவிரவாதிப் பட்டமும், இனப்படுகொலை என்பதை ஏற்காமல், இழந்த தரப்பின் மீதே மனித உரிமை குற்றச் சாட்டுகளை உலகம் வைக்கிறது. நமது தரப்பிலேயே சிலர் "புலிகளின் மீது பழி சுமத்தினால் நீதி தருவார்கள்" என்று அதையும் முயன்று பார்க்கிறார்கள். எதிரி முழு நிலத்தையும் ஆக்கிரமித்து, படைகளுடன் இன்னும் நிலத்தில் நிற்கிறான். இனவழிப்பு வேறுவழிகளில் தொடர்கிறது. உள்ளுக்குள் இருந்தும், வெளியில் இருந்தும் முதுகிலே குத்தப்படுகிறோம்.

இழந்த தேசங்கள் இவ்வாறு முயற்சிப்பதற்கு உளவியல்தான் காரணம். எப்படியாவது ஒரு குறைந்த பட்சம் நாம் ஏற்றுக்கொள்ளும் நீதியாவது கிடைக்காத என்ற ஏக்கம்தான். நாம் கடந்த 13 ஆண்டுகளாக முயல்கிறோம், ஆனால் எந்த பெரிய முன்னேற்றமும் இல்லை. ஒரு நாடு தனது பலத்தால் பெற முடியாததைச் சர்வதேசச் சமூகத்தால் பெற்றுத்தர முடியாது என்பது உலக அரசியலில் பாலபாடம்.

***What a nation could not protect by its own power could not be safeguarded by the international community. - Theodore Roosevelt***

இது தெரிந்தும், ஏன் இவ்வளவு காலம் மன்றாட வேண்டும்? என எனக்குத் தெரியவில்லை. நாம் இந்த "நீதி கோரல்" நிலையிலே இருப்பது ஆபத்தானது. அதற்காக நீதிகோரல் முயற்சிகளை முற்றிலும் கைவிடவேண்டும் எனக் கூறவில்லை. நாம் நமது வலிமையைக் கூட்டுவதற்கான செயல்பாடுகளையும் முடுக்கவேண்டும்.

## தகுதியற்ற வெற்றி (Unworthy Victories)

போரில் இழந்த தரப்பு எதிரிகளின் வெற்றியைத் தகுதியற்ற வெற்றி என்று இகழும். உதாரணமாக முதலாம் உலகப்போரின் முடிவில் யேர்மனி இவ்வாறு கூறியது. "10 மடங்கு எண்ணிக்கையில் அதிகமான எதிரிகளாலும், 27 தடவை முதுகிலும் குத்தித் தாக்கப்பட்டது".

ஈழப்போரில் இது யாராலும் மறுக்கப்பட முடியாது உண்மை. சிறுதொகை மக்களின் வலுவிடன் கொண்ட புலிகளை, உலக நாடுகள் எல்லாம் தடை செய்து, காட்டிக் கொடுத்து, எதிரிகளுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து, தடை செய்யப்பட ஆயுதங்களைப் பயன்படுத்தி, 20 மடங்கு படை பலத்தைக் கொண்டு, உள்ளுக்குள் துரோகிகளை உருவாக்கி, முதுகிலே குத்தி, பல படுதோல்விகளைச் சந்தித்து, பயந்து ஓடி, அனைத்து விதிகளையும் மீறி, முப்பது ஆண்டுகள் போரிட்டு, என்ன செய்வதென்றே தெரியாமல், இறுதியாக இனவழிப்பு செய்துதான் புலிகளின் "ஆயுதங்களை மௌனிக்க" வைக்க முடிந்தது. இது வெற்றியல்ல, ஒரு கோழையின் அவமானம். இலங்கைக்கு உதவி செய்தவர்களும் அவமானப்பட வேண்டியது.

புலிகள் இறுதிவரை களத்தில் நின்று, அழியா வரலாற்றை உருவாக்கி விட்டார்கள். அவர்கள் 300 கிரேக்க வீரர்களின் வரலாற்று நிகழ்வு போல அரிதான, மறக்க முடியாத வரலாற்றை உருவாக்கி இருக்கிறார்கள். இதுபோன்ற வரலாறு தனக்கு கிடைக்காதா? என்று நாடுகள் ஏங்கும். இந்தியாவிற்கு இதுபோன்ற வரலாறே கிடையாது. அதுபோன்ற வரலாற்றை உருவாக்க கேணல் ஹரிஹரன் முயன்றார்.

அமைதிப்படை உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்கம் செய்து, புலிகளுக்கு எதிராக நடத்திய தாக்குதலில் ஒருவரைத் தவிர அனைவரும் இறந்து விட்டனர். இது பிரிட்டனின் ***"Charge of the Light Brigade"*** போன்றது என்று ஒப்பிட்டார். நமக்கு இதைவிடப் பெரிதான நூற்றுக்கணக்கான வரலாற்றுத் தாக்குதல்கள் உண்டு. மற்றவர்களுக்கு அரிதானது, பலருக்கு அதுபோன்ற வரலாறே கிடையாது. நமக்கு ஒரு நாளுக்கு ஒன்று என்று நினைவு கூறினால், அனைத்தையும் நினைவுகூற சில மாதங்கள் ஆகும்.

அடிமையாக அடிவாங்கியே பல நூற்றாண்டுகளாக பழக்கப்பட்ட நாம், ஈழப் போரினால்தான் மானம் உள்ளவர்களாக உணர்கிறோம். எதிரிகள் நம்மை கொச்சைப் படுத்தினாலும், அவன் இன்னும் பயந்து

யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House



2022ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும்
அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்



**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**

எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

கொண்டுதான் இருக்கிறான். உலகமும், எதிரிகளும் நம்மை மானமுள்ள, வீரமுள்ள மக்களாகவேப் பார்க்கிறார்கள். நமது கண்களால் நம்மை நாமே உயர்ந்து பார்க்கிறோம்.

மனிதனின் உளவியல் ஏன் இவ்வாறு செயல்படுகிறது ?என்பதை ஓரளவு ஊகிக்கலாம். தான் இழந்ததை மீட்க வேண்டுமானால், மேலும் அதிக மனபலமும், தியாகமும் தேவைப்படும். அதற்கு இவ்வாறான வரலாறு உதவுகிறது. அவ்வாறு வரலாற்றைக் கட்டியமைக்கவில்லை என்றால் மக்கள் மனபலம் இழந்து, எதிரிகளிடம் நிரந்தரமாக தோற்றுவிடுவார்கள். போரில் பின்னடைவு என்பது தற்காலிக இழப்பு, அது நிவர்த்தி செய்யப்படவேண்டியது, அதற்கான மனபலமும், தியாக வலிமையையும் உண்டு என்பதை மக்களுக்கும், எதிரிகளுக்கும் உணர்த்துவதுதான் இவ்வாறான வரலாற்றுக் கட்டமைப்பின் நோக்கம்.

## ஆன்ம வெற்றி

போரில் இழந்தாலும் ஒரு தேசம் இரு முக்கியமான வெற்றிகளைப் பெறுகிறது.

***1. பண்பாட்டு உயர்வு :*** போரில் வெற்றியடைந்த பக்கம் பண்பாட்டில் சிதைகிறது. வெற்றியினால் ஆணவம், கர்வம், ஆடம்பரம், அறிஞர்களை இகழ்தல், சகிப்புத் தன்மையின்மை போன்ற பண்புகள் புகுந்து பண்பாட்டை சிதைக்கிறது, ஆனால், பின்னடைவைச் சந்தித்த பக்கம் மானம், ஆன்ம பலம், நேர்மை, அறிவு என அறம் சார்ந்த பண்புகளை வளர்த்து மேன்மை அடைகிறது.

பிரான்சு யேர்மனியிடம் தோற்ற பின்னர், தத்துவமேதை நீட்சே இவ்வாறு கூறினார். "இனி பிரான்சு பண்பாட்டில் உயரும்; சிந்தனையிலும், கவிதைகளிலும் உயர்ந்த யேர்மனி இனி தாழ்ந்து போகும். அதேபோல அமெரிக்க உள்நாட்டுப் போரில் வென்ற வடக்கு பகுதி பண்பாட்டில் தாழ்ந்ததாகப் பார்க்கப் பட்டது. தோற்ற தெற்கு பகுதி உயர்ந்ததாக மாறியது. முதலாம் உலகப்போரில் அமெரிக்கா வென்றாலும், அம்மக்களாலேயே அந்த பண்பாடு தாழ்ந்ததாகப் பார்க்கப் பட்டது."

"வெற்றி பெற்ற அமெரிக்க தலைமுறை "தொலைந்த தலைமுறை" *(lost*




*Generation)* என்று அடையாளப் படுத்தப்படுகிறது. அவர்கள் அந்நிய பிரான்சின் பண்பாட்டில் அடைக்கலம் புகுந்தார்கள். வெற்றியினால் உருவாகும் பண்பாட்டு சிதைவு என்பது நாகரீகங்கள் அழிவதற்கு ஒரு முக்கிய காரணம்" என்கிறார் வரலாற்று ஆய்வாளர் இடாயின்பீ.

**2 அறிவில் உயர்வு :** வெற்றி பெற்ற பக்கம் ஆணவத்தால் தான் செய்தது எல்லாம் சரி என்று கற்காமல் இருக்கும். ஆனால் தோற்ற பக்கம் கற்று முன்னேறுகிறது. வெற்றி நிரந்தமற்றது, வெற்றியும், தோல்வியும் சுழற்சியில் வருவது என்பதை தோற்ற பக்கமே உணரும். இதுதான் வெற்றியின் சாபம் என்பது.

யேர்மனி பிரான்சை 1871 போரில் வென்றது. அந்த வெற்றியின் சாபத்தினால் முதலாம் உலகப்போரில் 1918 -இல் தோற்றது என்றார் யேர்மனியின் ஐயின்ரிச்சு மான் **(Heinrich Mann)**. அதனால் போரில் வெற்றி பெற்ற நாடுகள் யேர்மனியின் பாதையில் போகவேண்டாம் என்று அறிவுறுத்தினார். வெற்றியின் விளைவுகளிலிருந்து வெளிவருவதைவிட, தோல்வியின் விளைவுகளிலிருந்து வெளிவருவது எளிதானது என்கிறார். இதனால்தான் வெற்றிபெற்ற பக்கம் அடுத்த சுற்றில் தோற்கிறது.

வெற்றி என்பது சமூகத்திற்கு சாபமாகவும், தோல்வி என்பது ஒரு சமூகத்தின் ஆன்மாவை தூயப்படுத்துவதாகவும் அமைகிறது. முடிவில் ஆன்மபலம் கொண்டவர்களே உயர்கிறார்கள்.

நாம் 2009 பின்னடைவிற்குப் பின்பு பண்பாட்டில் உயர்ந்திருக்கிறோமா? கற்றிருக்கிறோமா? நமது ஆன்ம பலத்தை வலுப்படுத்தி இருக்கிறோமா? என்பது நாம் கேட்க வேண்டிய கேள்விகள். இதற்கான விடை எனக்குத் தெரியவில்லை, ஆனால் இவை அனைத்திலும் நாம் உயர வேண்டிய தேவை இருக்கிறது என்றே உணர்கிறேன். அவ்வாறு உயர்த்தா விட்டால் அடுத்த சுற்றுக்கு எழுந்து நிற்கும் வலிமை நமக்கு இருக்காது.




பகுதி.43

அவதானி

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

போராளிக் குழுக்களுக்குள் தகவல் தெரிவிப்பவர்களாக இந்தியாவைச் சேர்ந்த எவரையுமே உள்ளே அனுப்பவில்லை. ஆனால், போராளிக் குழுக்களுக்குள் தாம் கொடுக்கின்ற பணத்திற்காகவோ, பொருளுக்காகவே, பெண்ணுக்காகவோ வேலை செய்வதற்கு என உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தது இந்திய உளவு நிறுவனம்.

ஒரு உளவாளி எப்படிச் செயல்பட வேண்டுமென்பதை, ஆயுதப் பயிற்சி கொடுக்கும் போதே அதற்கான பயிற்சியையும் கொடுப்பது உளவு நிறுவனங்களின் அணுகுமுறையாகும்.

பொதுவாக அது தீவிரவாத அமைப்பாக இருந்தாலென்ன? விடுதலைப் போராட்ட அமைப்பாக இருந்தாலென்ன? ஒவ்வொரு போராளி உறுப்பினரையும் அக்குழுக்களின் தலைமைத்துவம் கழுகுப் பார்வையுடன் கண்காணித்துக் கொண்டேயிருக்கும்.

அந்தப் பார்வைக்குள் அகப்படாமல், ஒரு போராளி உளவு நிறுவனத்திற்கு தகவலைக் கொடுக்கிறான் என்றால், அவன் பெற்றிருக்கும் உளவு பார்க்கும் பயிற்சி சாதாரணமானதல்ல.


ஒரு போராளி இன்னொரு போராளியுடனோ அல்லது போராளிகள் பலரோ இயல்பாக பேசிக் கொண்டிருக்கும் போதே, சொற்களின் தொனி மூலமே உளவாளிகளாக வேலை செய்யும் போராளிகள் சொல்லப்படும் தகவலையறிந்து, அதனை கடத்திச் சென்று உளவு நிறுவன ஒற்றர்களுக்குச் சொல்லி விடுவார்கள்.

போராளிக் குழுக்களின் அத்தனை செயல்பாடுகளையும் இந்தியப் புலனாய்வுத்துறையினர் உடனுக்குடன் அறிந்து கொண்டேயிருந்தார்கள்.

போராளிக் குழுக்களை வளர்த்து விடுவதுடன், அந்த வளர்ச்சிக்கு இலங்கைத் தமிழ் மக்களை உறுதுணையாக்குவது என்ற திட்டத்திற்கமைய உள்நாட்டிலும் புலம்பெயர்ந்து, வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களையும், அதற்கு ஆதரவாக அணிதிரட்ட வேண்டும் என்ற திட்டத்தையும் கொண்டிருந்த இந்திய உளவு நிறுவனத்தினர், வெளிநாட்டு இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் ஊடுருவித் தமக்காக வேலை செய்வதற்கு ஒற்றர்களை நியமித்தனர்.

இலங்கைத் தமிழரின் தனிநாட்டு விடுதலைப் போராட்டத்திற்காக பல போராளிக் குழுக்களை உருவாக்கியதில் உள்ள ஒரு பெரும் இராஜதந்திரதிட்டத்தை அவர்கள் அரங்கேற்றினார்கள்.

இந்தியா தமிழரின் உரிமையை வென்றெடுத்துத்தரும் என்ற நம்பிக்கையை ஊட்டியதுடன்,பல போராளிக் குழுக்களை உருவாக்கச் செய்ததன் மூலமாக, அப்போராளிக் குழுக்கள் கொண்டுள்ள சித்தாந்தத்திற்கு அமைய அதனை ஆதரிக்கும் மக்களை தீவுக்கூட்டங்கள் போல தனித்தனிக் குழுநிலைக்குள் கொண்டு வந்தனர்.



இலங்கையில் தனிநாட்டடினை ஏற்படுத்துவதோ அல்லது கணிசமான உரிமையை இலங்கை அரசிடமிருந்து தமிழர்களுக்கு பெற்றுக் கொடுப்பதோ மிகவும் சுலபமான காரியம் என அனைத்து போராளிக் குழுக்களுக்கும் நம்பிக்கையூட்டப் பட்ட அதே வேளை போராளிக் குழுக்களுக்குள் ஒன்றுக்கு ஒன்று அதிருப்தியையும் உள்பூசல்களையும் கொண்டவையாகவும் வளர்த்து விடப்பட்டன.

ஒரு காலகட்டம் வரையும் ஒரே இலக்கு என்ற கோட்பாட்டுக்கமைய ஒன்றிணைந்து போராடிய குழுக்கள் காலப் போக்கில் ஒன்றையொன்று எதிர்த்து பகைமையை வளர்த்துக் கொண்டன என்பதைவிட, வளர்த்துவிடப்பட்டன என்ற சொல்லலாம். ஒவ்வொரு பேராளிக் குழுக்களின் பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதை அக்குழுக்களுக்குள் போராளியாக வேசம் போட்டு கலந்து நின்ற சுதேசிய ஒற்றர் மூலமாக இந்தியப் புலனாய்வுத் துறையினர் அறிந்து கொண்டேயிருந்தனர்.

ஒரு தனிமனிதனுக்கு இருக்கும் உடல் பலம், பலவீனம் உளப் பலம் பலவீனம் போல போராளிக் குழுக்களுக்கும் இருக்கும். வெளிக்காட்டிக் கொள்ளாத ஆசைகளின் இருப்பிடமாக உளப் பலவீனம் இருக்கும்.

இத்தகு அடையாளம் குழுத்தன்மை அமைப்புகளின் உறுப்பினர்களிடமும் இருக்கும். இதனைக் கண்டறிவதில் வெற்றியடையும் ஒரு உளவு நிறுவனம், தான் இலக்கு வைத்த நாட்டுக்குள்ளேயோ அல்லது போராளிக் குழுக்களுக்குள்ளேயோ சுலபமாக ஒற்றர்கள் மூலமாக சுலபமாக நுழைந்துவிடும்.

அதே வேளை போராளிக் குழுக்களுக்குள்ளேயே பலமான குழு எதுவெனக் கண்டறிந்து அதனை வளர்த்து விடுவதுடன், பலவீனமான போராளிக் குழுக்களை பலவீனப் படுத்துவதிலேயே தனது வியூகத்தை அமைத்திருக்கும்.

இலங்கை அரசுக்கெதிராக கொரில்லாத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த அத்தனை போராளிக் குழுக்களுக்குள்ளும் இந்தியப் புலனாய்வப் பிரிவின் சுதேசிய ஒற்றர்கள் போராளிகளாக ஊடுருவியிருந்தனர்.




ஒவ்வொரு போராளிக் குழுவினர்களுடைய போராட்ட மனித வலு, அவர்கள் இலங்கை அரசுக்கெதிராக போராடுவதற்காக வைத்திருந்த கோட்பாடு, இராணுவத்தினரை தாக்குவதற்கான இடங்கள், அதுசார்ந்து களநிலவரத் தன்மை, குடிசன வாழ்விடங்களில் கொரில்லா உத்திமுறைத் தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு இராணுவத்தினரால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்,அதன் மூலம் பொதுமக்கள் ஆற்றப் போகும் எதிர்வினைகள், சாதக பாதக எண்ணங்கள் என்பன உட்பட போராளிக் குழுக்களையும் இலங்கை அரசையும் சிலந்தி வலை போன்ற சூழ்ச்சி வலைக்குள் இந்தியாவின் தனிப்பெரும் புலனாய்வுப் பிரிவான றோ வகுத்து வைத்திருந்தது.

இலங்கையை எப்பொழுதும் தனது பார்வைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இராசதந்திரிகள், வரலாற்றாசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பெரும் பத்திரிகையாளர்கள், சமூகவியலாளர்கள் மானிடவியலாளர்கள் போரியல் அறிஞர்கள் எனப் பலர் ஒருங்கிணைந்து மாதக் கணக்காக பல கோணங்களில் சிந்தித்து விவாதித்து கலந்துரையாடி திட்டம் வகுக்கப்பட்டு அத்திட்டம் இந்தியப் புலனாய்வுத் துறையாகிய றோவிடம் கையளிக்கப் பட்டது.

இது பலகட்ட படிமுறைகளைக் கொண்டதாகவிருக்கும்.தகவல்களை அறிந்து கொள்வதற்கான முதல் படியில் இருப்பவர்கள் பொதுமக்கள். பொதுமக்களிடமிருந்து இலங்கையின் பல்வேறு கட்டமைப்புகளின் கட்டமைப்பை அறிந்து கொள்வதற்காக அவர்கள் பல்வேறு தொழில்களைச் செய்பவர்களுடன் நட்பு ரீதியாகவும் போகிற போக்கில் கதைப்பவர்களாகவம் அணுகுவார்கள். தகவல்கலைச் சொல்பவர்களுக்கு, அத்தகவல்களால் இலங்கை எவ்வாறு கையாளப்படப் போகின்றது என்பது தெரியவே தெரியாது.

ஒரு திணைக்களத்திலிருக்கும் அதிகாரிகள் தொடங்கி, அங்கிருக்கும் பணியாளர்கள் தகவல்களைச் சொல்பவர்களாக இருப்பார்கள். புகையிரதத்தில் பயணிக்கும் போது அருகிருக்கும் சக பயணியுடன் உரையாடும் போது அவர் யாரோ ஒரு பயணி என எண்ணுவாரேயன்றி தான் சொல்லுகின்ற




வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....

# S.K. Silks & Gold Paradise

SK
SINCE 2003

மாபெரும்
ராஜ
முத்திரை



ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

அரசாங்க சார்பு அல்லது எதிர்க் கருத்துகளை உள்வாங்குபவராக இருப்பாரேயன்றி அல்லது அவர் ஒரு ஒற்றராக இருப்பாரோ எனக் கொஞ்சமும் எண்ணமாட்டார்.ஒற்றரான சக பயணி மெதுவாக தனக்கு அருகிலிருப்பவர் எந்தத் திணைக்களத்தில் வேலை செய்கிறார் என்பதை யதார்த்தமாக கதைப்பது போல கதையோடு கதையாக அறிந்து கொள்வார்.

தொடர்ச்சியாக ஒரே நேரத்தில் பயணிக்கும் ஒற்றரும் சகபயணியும் நாளடைவில் நண்பர்களாகி விடுவார்கள். திணைக்கள பயணி மட்டுமல்ல ஒற்றராக செயல்படும் பயணிகூட ஒரு தொழில் செய்பவராக இருக்க வாய்ப்புண்டு. இது போன்று பேருந்துப் பயணத்தின் போதும், வாடகைக் கார் பயணத்தின் போதும், தியேட்டர்களிலும், கடற்கரைகளில் பொழுது போக்கப் போய் அங்கு நண்பராகும் ஒற்றர்களுடன் கதைத்து தகவல்களைச் சொல்லும் நிலை ஏற்படுகின்றது.

இலங்கையில் இனக்கலவரம் தூண்டிவிடப் பட்டது இந்தியாவால்தான் என்பதை ஆரம்ப பகுதிகளில் குறிப்பிட்டிருந்தேன். அதனை ஒவ்வொரு தொடரிலும் குறிப்பிட்டு வருகிறேன்.அந்த இனக்கலவரங்கள்தான் தமிழர்கள் - சிங்களவர்களுக்கிடையிலான முரண்பாட்டை தோற்றுவித்து இலங்கையை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது என்பதை தொடராக இக்கட்டுரையை வாசிப்போர் இலகுவாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தான் குறிப்பிட்டு வருகின்றேன்.

பொது மக்களுக்கு அடுத்து அமைச்சர்கள், அதிகாரிகள்கூட ஒற்றர்களாக செயல்படுகிறார்கள். தகவல்கலைச் சேகரிக்கும் ஒற்றர்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து உளவு நிறுவனம் அவர்களுக்கு மாதாந்தச் சம்பளத்தையே வழங்குவதும் இடம் பெறும்.




Opening hours : Mon-Sat 10.00am - 20.00pm
https//www.facebook.com/sari1fashionhouse

உளவு நிறுவனம் தான் பெற்றுக் கொண்ட தகவல்களை மேலே கூறிய பல்துறை அறிஞர்களின் திரட்சி அமைப்பான இராசதந்திரிகளின் அமைப்பிடம் கையளிக்கும்.உளவு நிறுவனத்தை, இலங்கையில் கையாள்வது இலங்கையில் இருக்கும் இந்தியத் தூதரகமுமாகும்.

உளவு நிறுவனமான றோ கையளித்த தகவல்களை அறிஞர் குழு பலகட்ட ஆய்வுகள் ஊடாக அடுத்து இலங்கையை எவ்வாறு கையாள்வது எனத் திட்டமிட்டு, அத்திட்டத்தை நடவடிக்கையாக்குமாறு உளவுப் பிரிவுக்கு ஆலோசனை வழங்குவார்கள்.

இந்தியாவின் புலனாய்வுப் பிரிவான றோ ஒரு ஆயுதம் ஏந்தாத இராணுவமே. இது இந்தியாவின் புலனாய்வுப் பிரிவுக்கு மட்டும் பொருந்துவது அல்ல.இது எல்ல நாட்டுப் புலனாய்வுப் பிரிவுக்கும் பொருந்தக் கூடியதே. இதற்கமையவே இலங்கையைப் பலவீனப்படுத்த போராளிக் குழுக்களுக்கு ஆயதப் பயிற்சி கொடுக்கப்பட்டதுடன், ஒவ்வொரு போராளிக் குழுக்களையும் தன்த்தனியாக கையாள்வதற்கு அப்போராளிக் குழுக்களுக்குள் போராளி வேடத்தில் ஒற்றர்களை அனுப்பியதுமாகும்.

அதே வேளை ஒரு போராளிக் குழுவின் தாக்குதல் நடவடிக்கை இரகசியங்களை இன்னொரு போராளிக் குழுவிற்கு தெரியப்படுத்துவதை ஒற்றர்கள் செய்வார்கள். இதன் மூலம் ஒன்றுக்கொன்று முரண்பாடாகி, அது பின்பு பெரும் பகையாகி ஒன்றையொன்று அழிக்க திட்டமிடும்.

போராளிக் குழுக்களுக்குள் இருக்கும் ஒற்றர்கள் போராளி குழுவை அழிப்பதற்காக, மற்றையவர்களைவிட தாங்கள் முன்மாதிரியாக முன்னோக்கி நிற்க வேண்டும் என்பதற்காக சூழ்ச்சி நிறைந்த ஆலோசனைகளை தலைமையிடம் வழங்குவார்கள்.

(தொடரும்)



24 மணிநேர
தகவல் உதவிச்
சேவையுடன்





V BOX

இப்போது அனைத்து நாடுகளிலும்

300 க்கும் மேற்பட்ட
Channels மற்றும் 5,000க்கும்
மேற்பட்ட திரைப்படங்கள்






வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

**REACH OUR DISTRIBUTORS**

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780

கெங்கா ஸ்ரான்லி

**சிறுகதை**

# டாக்டர் வள்ளி

வள்ளியும், தாயும் ஒரு வீட்டில் தனியாக இருக்கின்றார்கள். நடந்த போர்ச் சூழலில் கணவன், மகனை இழந்த பூபதி, தன் மகள் வள்ளியுடன் ஜீவிக்கிறாள். வீடு என்று இல்லாமல் ஒரு கொட்டில் வீடு. ஆனால் அதைக் கிடுகுகளால் அடைத்து வைத்திருக்கு. அதுதான் அவர்களின் மாளிகை. பூபதி அந்தக் கொட்டிலை சுத்தமாக வைத்திருந்தாள். போர்ச் சூழலில் பாதிக்கப்பட்டவருக்குக் கிடைக்கும் பணத்தில் இருவரும் காலம் கழிக்கின்றார்கள். வள்ளியும் அருகிலிருக்கும் நகரத்தில் 10 ம் வகுப்பு படிக்கிறாள். பஸ்சில் தான் போய் வருவது. பூபதியும் சும்மா இருப்பதில்லை, ஏதாவது கூலி வேலை செய்வது இப்படியே இவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

இப்படி இருக்கையில் வள்ளி நல்ல கெட்டிக்காரி. 10 ஆம் வகுப்பில் நல்ல பெறுபேறு உடன் பாஸ் பண்ணியிருந்தாள். இனி என்ன செய்யலாம்? என யோசித்த பொழுது, உயர்தரம் படிக்கலாம் எனச் சொன்னாள் அம்மாவிடம். அம்மா சொன்னா, எப்படி, கஸ்டமாக இருக்குமே? என்று. அதற்கு வள்ளி 'அம்மா நானும் ஏதாவது கூலிவேலை செய்து படிக்கிறேன்' என்றாள். அவர்கள் ஊரிலும் பணக்காரர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அப்படியான ஒருவர்தான் முத்துசாமி அவர்கள். பெரிய தென்னந்தோப்பு, வயல், தோட்டம் என வைத்திருந்தனர். அவர்களிடன் வள்ளியும், தாயும் போய் வேலை கேட்டனர். அவரும் சரி என்று கொடுத்தார்.

அம்மா ஒவ்வொரு நாளும் போய்ச் செய்வா. வள்ளி சனி, ஞாயிறு மட்டும் போய்ச் செய்வாள். இப்படியே காலம் உருண்டது. வள்ளியும் உயர்தரத்தில் திறமைச் சித்தியுடன் தேர்ச்சி பெற்றாள். ஊரவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி. மாவட்டச் செயலாளரே வந்து அவளைப் பாராட்டி, படம் எடுத்துப் பத்திரிகையில் போட்டுப் பெரிய ஆர்ப்பாட்டம்.

இந்நிகழ்வை பத்திரிகையில் பார்த்த ஒரு பிரமுகர் மனித நேயமிக்கவர். வள்ளியை வந்து சந்திக்கும்படி தபால் போடுகின்றார். வள்ளியும் அவரைப் போய்ச் சந்திக்கிறாள். அப்போது அவர் கேட்டார், 'ஏன் பிள்ளை, நீ மருத்துவம் படிப்பதற்கு விரும்புவதாகக் கூறினாய்?



என்று, வள்ளியும் 'ஆமா ஐயா, என்னுடைய ஊர்மக்களுக்கும் நான் சேவை செய்ய விரும்புகின்றேன். அதாவது பின் தங்கிய கிராமங்களுக்கு மருத்துவ உதவி செய்ய வேண்டும். அதனால் நான் மருத்துவம் படிக்க விரும்புகிறேன்' என்று சொன்னதும், அவளைப் பாராட்டி மருத்துவம் படிக்க ஏற்பாடு செய்தார்.

அம்மாவும் வேலைக்குப்போய் அந்தக் காசிலும் சேர்த்து, அவள் தனது படிப்பைத் தொடர்ந்தாள். வருடங்கள் உருண்டோடின. வள்ளி இப்போது வைத்தியர் வள்ளியாகிவிட்டாள். அந்த ஊர் மக்கள் அதைக் கொண்டாட ஒரு விழா ஏற்பாடு செய்தார்கள். வள்ளியும் தனக்கு உதவிசெய்த பிரமுகரைப் பிரதம விருந்தினராக அழைத்திருந்தாள்.

பண்ணையார் முத்துசாமி, மாவட்ட செயலாளர் என்று எல்லோரும் வந்து அவளைப் பாராட்டினர். பொன்னாடை போர்த்தினர். முத்துசாமி பேசும்போது 'வள்ளியும், தாய் பூபதியும் எனது தோட்டத்தில்தான் வேலை செய்தார்கள்' என்று நசூக்காகக் கூறினார். இப்போது வள்ளி பேசும் போது, அந்தப் பிரமுகரை வணங்கி, அவருக்கு நன்றியுரைத்தாள். பின் 'முத்துசாமி ஐயா எங்களுக்கு வேலை தந்தார். அவரிடம் வேலை செய்ததால் சம்பளம் தந்தவர். அந்த உதவியை மறக்கமாட்டோம்' என்று சொல்லும் போது முத்துசாமிக்கு சுருக்கென்றது. பிரமுகர் புன்னகைக்க முத்துசாமி அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

விழாவில் வள்ளி தனது திட்டங்களைக் கூறினாள். 'கிராமத்து வைத்தியசாலையைப் பெரிப்பித்து, கிராம மக்களைக் காக்க வேண்டும். முதலில் ஒரு முதலுதவி அம்பூலன்ஸ் தேவை. அடுத்து வைத்திய சாலைக்கு ஏற்ற உபகரணங்கள் வேண்டும். இவை எல்லாம் பெறுவதற்கு எமக்கு உதவி வேண்டும். அதை நான் மேலிடத்தில் கேட்பதற்கு முயற்சி செய்கிறேன். பின் தங்கிய கிராமம் என்று பின் தள்ளாமல் அங்கும் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் வைத்திய உதவி வேண்டும். எனவே, நான் என்னை முழுவதுமாக அப்பணிக்கே செலவிடப் போகின்றேன்' என்றாள். எல்லோரும் பாராட்டினார்கள்.

பத்திரிகையாளர்கள் வந்து சில கேள்விகளைக் கேட்டார்கள். 'எல்லோரும் படித்து முடிந்தவுடன் வெளிநாடு செல்வார்கள் அல்லது வேறு




இடங்களில் வேலை செய்ய விரும்புவார்கள். உங்களுக்கு அப்படியான எண்ணம் இல்லையா?'

அதற்கு வள்ளி, 'இல்லை எனக்கு எங்கள் மக்களுக்குச் சேவை செய்வதே எனது குறிக்கோள். எனக்கு இங்கு வரும் வருமானமே போதும். நானும், அம்மாவும் தானே அதனால் பரவாயில்லை'.

'இல்லை நீங்கள் வேறு இடத்தில் வேலை என்றால் வசதி வாய்ப்பு வருமே!'.

'எனக்கு அது தேவையில்லை. எங்களது கொட்டில் வீடே எனக்கு மாளிகை. இவ்வளவு நாளும் வாழ்ந்த இடம் இதுவே போதும்'.

'ஏன் நீங்கள் பெரிய வி.ஐ.பி யாக வாழ விரும்பவில்லை?'.

'காரணம் வி.ஐ.பி யாக வாழ ஏழை மக்களைச் சுரண்டி வாழும் வைத்தியர்களுக்கு ஒரு பாடமாக வாழ்ந்து காட்ட வேண்டும். அரசாங்க ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, ஏன் ஏழை மக்களை வதைக்க வேண்டும்? ஏழைகளின் கஷ்டங்களைப் புரிந்தவள் நான். அதனால் தான் அவர்களுக்கு நல்லது செய்ய நினைக்கிறேன்'.

ஊடகவியலாளர்- 'நல்லது உங்கள் நல்ல மனதிற்கும், உங்களுடைய மனித நேயத்திற்கும் எங்களுடைய வாழ்த்துகள். உங்கள் சேவை சிறக்கட்டும். நாங்களும் எங்களால் ஊடக ரீதியாக ஏதாவது உதவி செய்ய முயற்சிகின்றோம். சிறு துளி தானே பெரு வெள்ளம்' என்று விடைபெற்றனர்.

பிறகென்ன இதைக் கேள்விப்பட்ட பிரமுகர் வள்ளியைப் பாராட்டினர். தனக்கு இப்போதுதான் மனம் மகிழ்ச்சியடைந்ததாகச் சொன்னர். அதற்கு வள்ளி 'எல்லாம் நீங்கள் செய்த உதவி ஐயா. இல்லாவிட்டால் எனது ஆசை நிறை வேறி இருக்குமா?' என்று நன்றி கூறினாள்.

இதை கேள்விப்பட்ட சிலர் தாங்களாகவே உதவி செய்ய முன் வந்தனர். வைத்திய சாலை திருத்தப்பட்டு, ஒழுங்கு முறையில் நடக்கிறது. வள்ளியின் சேவையும் நன்றாகப் போகிறது. மக்களும் சந்தோஷமாக இருக்கின்றார்கள்.

ஆனாலும் வள்ளி ஒரு சயிக்கிளில் தான் வேலைக்குப் போய் வருவாள். அந்தக் கொட்டில் வீட்டில் தான், அம்மாவும், மகளும் வசிக்கின்றனர். பெரிய ஆட்கள் வந்தாலும் கொட்டில் வீடெனச் சொல்வர். ஆனால் வீடு கொட்டில் வீடென்றாலும், வள்ளியில் மனம் மாளிகை போன்றது என மக்கள் போற்றுவர். அதில் நிம்மதியாக வாழ்கிறாள் வள்ளி.





Jaffna Stores
Geschäftsführer : Herr Thayaharan Nadarajah
தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்
25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...
மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்
ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்
www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906
Feilenstraße 8
33602 Bielefeld
Basmati Rice

மனோ



என்ன கேட்டுள்ளார் ?

## ஐ.நா.மனித உரிமை ஆணைச்சபை அமர்வில்

# சிங்களம் சொல்லப் போவது என்ன?

என்ன பதில் கொடுப்பார் ?




இலங்கை புலிகளுக்கு எதிராக நடத்திய போரைத் தமிழ் இன அழிப்பு என்றோ, போர்க் குற்றம் என்றோ விசாரிக்கப் படுவதை இலங்கை அரசு கடந்த 13 வருடங்களாக எதிர்த்தும், பயங்கர வாதத்துக்கு எதிரான போர் எனக் கூறியும் எந்தவித நீதி விசாரணைக்கும் இடம் அளிக்காமல் தவிர்த்தே வந்துள்ளது. இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களும், இந்தியா ஐ;நா சபை உட்பட பல உலக அரசுகளும் ஆதரித்தே வந்துள்ளன. விதி விலக்காக சில உலகத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும், ஐ.நா.மனித உரிமை ஆணைச் சபையும் அதன் சில அங்கத்துவ நாடுகளும் அந்தப் போருக்கான பொறுப்புக் கூறலை இலங்கை அரசு ஏற்க வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி வந்தே உள்ளன.

அந்த வகையில் மிக நியாயமான முறையில் முன்னாள் மனித உரிமை ஆணயாளராக செயற்பட்ட லூயிஸ் ஆபர், திருமதி நவநீதம் பிள்ளை மற்றும் தற்போதைய ஆணையர் மிச்சலே பச்லெட் அம்மையார் எனப் பலரும் படாத பாடு பட்டும் கூட, சிங்களம் 'வேறு யாரும் விசாரிக்க முடியாது தங்களது உள்நாட்டு விசாரணைமட்டும் தான் இடம் பெற முடியும்' எனக் கறாராகக் கூறி வந்துள்ளது.


ஆனாலும், இலங்கையின் பயங்கரவாத தடுப்புச்சட்டம் ,அதன் கீழான சந்தேக நபர்கள் மீதான சித்திரவதைகளும் அரசின் சட்டத்துக்குப் புறம்பான, அறியப்படாத வதை முகாம்கள், வெள்ளை வான் கடத்தல், நீதிக்குப் புறமான வதைகள், படு கொலைகள், உலக மனித உரிமை மீறல்கள் என்பவை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா.மனித உரிமை ஆணைச் சபை வலியுறுத்திக் கொண்டே 12 வருடங்கள் கழிந்து விட்டன.

இப்படியான பின்னணியில்தான் இந்த ஆண்டு பிப்ரவரி 28ந்திகதி தொடங்கும் 49ஆவது ஐ.நா. சபை மனித உரிமைச் சபையின் அமர்வில் அதன் உயர் ஆணையர் மிச்செலா பச்லெட், இலங்கை அரசின் மனித உரிமைகள் தொடர்பான அரசின் செயற்பாடுகள் பற்றிய தமது கவனிப்புகளைச் சென்ற வருடம் நிறைவேற்றப்பட்ட, 46/1 நிறைவேற்றப் பட்ட தீர்மானம் தொடர்பான இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இலங்கை அரசு அது தொடர்பான எவ்வித கருத்தையும் வெளியிடாமல் உள்ளது. அந்தத் தீர்மானம் 22 ஆதரவும், 11 எதிர்ப்பும், 14 தவிர்ப்பு வாக்குகளால் நிறைவேற்றப் பட்டன. ராஜபக்ஷேக்களுக்கு அந்த நிகழ்வானது தேவையற்ற, ராஜதந்திர அனுபவமற்ற, வேண்டப்படாத கூத்தாக அமைந்தது என்கிறார் அவுஸ்திரேலியாவில் வாழும் அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் அமிர் அலி.

என்ன படித்தாலும் இஸ்லாமியரும், சிங்களவரும் தமிழரைக் கழுவி ஊற்றும் கனவான்கள் என்பதை தமிழ் இனம் ஏற்றே ஆக வேண்டிய கட்டாயத்தைத் தமிழ் மக்களும், தமிழர்களும் இலகுவாகக் கடந்து போய் விடுகிறார்கள்.


ரவூப் ஹக்கீம்


றிஷாட் பதியுதீன்


ஏ.எச். எம் பௌசி

1970ல் ஸ்ரீமாவோ அமைச்சரவையில் கல்வி அமைச்சராக விளங்கிய பதியுதீன் மொகமட், சிங்கள பாடமொழி நூல்கள் மூலம் தமிழ் இன வெறுப்பு அரசியலை வளர்த்து, 2009ல் தமிழ் இன அழிப்பாகவும், இன்று தமிழர் தாயக அழிப்பாகவும் செயற்பட உதவினார். 2019 தமிழ் கத்தோலிக்கர்கள் மீதான உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களும், சிங்களப் பேரினவாதிகளும், இஸ்லாமிய அரசியல்வாதிகளும் பின் நின்று இயக்கினார்கள் என்பதையும் தமிழ் இனம் மறந்தே விட்டது.

தமிழ் இனம் நம்பிய ரவூப் ஹக்கீம், றிஷாட் பதியுதீன், ஏ.எச். எம் பௌசி போன்ற முஸ்லீம் தலைவர்களால் தமிழினம் பட்ட, படுகின்ற அவலங்களை அவர்கள் வழிபடும் அல்லாவே ஏற்க மாட்டார்.

இவர்கள் நடத்தி வரும் அரசியலைத் தமிழ் மக்கள் சகிக்க வேண்டிய தேவையோ, கட்டாயமோ என்ன? இவர்களைப் போன்றவர்களை எமது தோள்களில் சுமக்க வேண்டியதுதானா? தமிழர் தாயக மண் மீட்பைத் தடைசெய்யும் இவர்களுக்குத் தனி அலகு வேறா? ஐ.நா.மனித உரிமை ஆணையர் சிங்களத்தின் மீது வைக்கும் கேள்விகள் தொடர்பான இவர்களின் பதில்கள் நிச்சயம் எமக்கு சாதகமகவோ, உண்மையாகவோ இருக்காது. வேலியில் போகும் ஓணான்களை வேட்டிக்குள் கட்டி, நாம் வேதனைப்படாமல் இருக்க வேண்டுமென்றால், அவற்றை எல்லாம் சிங்களத்தின் வேலிக்கு அப்பால் விரட்டிவிட நாம் தயாராக இருக்க வேண்டும்.

சென்ற வருடத் தீர்மானத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், அரசு பயங்கரவாத தடைச் சட்டத்தைச் சீர்செய்யவும், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சில நடவடிக்கைகளை அரைமனதுடனான அழகுபடுத்தலை செய்து பார்க்ககே அல்லாமல், தேவைக்கு ஏற்ற வகையில் செய்யாமல் தவிர்த்துள்ளது.ஜெனிவா, இலங்கை அரசுக்குக் கொடுத்த இரண்டாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இலங்கை சுத்தமான கரங்களுடன் திரும்புமா? என்பது சந்தேகமே! என ஒரு இஸ்லாமிய ஆய்வாளர் தெரிவிக்கையில், ஒரு சிங்களவரின் கருத்துகள் முற்றிலும் வேறுவிதமாக உள்ளது.

சிங்களப் பா.உ. கார்சா டி சில்வா 'உள்நாட்டுத் தீர்வுக்கான காலம் கடந்து விட்டது. உடனடியாகச் சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெறுங்கள்' என்கிற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் தமிழ் இன அழிப்புப் போர் தொடர்பான ஒரு சொல் கூட அவர் குறிப்பிட வில்லை. அவருடைய ஒவ்வொரு சொல்லும் சிங்கள தேசத்தின் இன்றைய பொருளாதார நிலையும், நாடு உள்ள அவலம் பற்றியதாகவுமே உள்ளது. அவர் சொல்வதை அப்படியே தருகிறோம்.

"நாடு முற்றிலுமாக இன்று குழம்பிய நிலையில் உள்ளது. எரி பொருள் நிலையங்களில் எரிபொருள் கட்டுப்பாடாக வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் மின் தடைகள் உள்ளன. மருந்துகளின் இறக்குமதி உட்பட அவசியமான பொருட்களின் இறக்குமதிக்கு டொலர் தட்டுப்பாடுள்ளது. அடுத்ததாக உணவு கட்டுப்பாடு வரப் போகிறது. இப்படியே நாம் தொடர்ந்து போனால் விக்கி, விக்கி ஓடும் கார்,முடிவில் நின்று விடுவது போல உள்ளது."

இஸ்லாமியரான ஆய்வாளரும், சிங்களவரான ஆய்வாளரும் சர்வதேச அரசியலில் சிங்களம் காட்டும் அடாவடித்தனம் பற்றியோ, நடந்த தமிழ் இனஅழிப்பும் அதற்கான பொறுப்புக் கூறல் பற்றிய அரசின் செயற்பாடுகள் பற்றி பேச தயாராக இல்லை. இந்த இலட்சணத்தில் எங்கள் தமிழ்த் தலைவர்களின் நிலையோ, மகா மோசமாகக் காணப்படுகிறது. தற்போதைய த.தே.கூ.தலைவர் சுமந்திரன் தெரிவித்ததைப் பாருங்கள்:-

அவருடைய பேச்சில் ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் தமிழின அழிப்புப் போர் தொடர்பான எதுவித பேச்சும் இல்லாத, உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டமை, ஒரு ஜனநாயக விரோதசெயல். அதை முழுமையாக எதிர்க்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு நான்கு வருடத்திற்கு ஒரு தடவை தேர்தல்

நடாத்தப்பட வேண்டும். அவசரத் தேவைகளுக்காக அதனை நீடிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு இருந்தாலும், இப்போது செய்யப்பட்டிருக்கும் நீடிப்பு எந்தவிதக் காரணமும் இன்றி செய்யப்பட்டுள்ளது. அரசாங்க கட்சித் தேர்தலுக்கு முகம்கொடுக்க திராணியில்லாமல் இதனை நீடித்திருக்கிறார்கள்.

ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சி நீடிக்கப்பட முடியாது. அது முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். அவர்களுக்கு மக்கள் மத்தியிலே இருந்த செல்வாக்கு இப்போது பூச்சியமாகி விட்டது. நாடு பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாமல், சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. அதனாலே மின்சாரத் தட்டுப்பாடு, அத்தியவசிய பொருட்களின் விலையேற்றம் போன்ற விளைவுகளைச் சந்திக்கின்றோம்.

நாட்டிலே பஞ்சம் ஏற்படும் என்று நாங்கள் முன்னரே சொல்லியிருந்தோம். அது தற்போது நிகழத் தொடங்கியிருக்கிறது. எனவே, நாட்டை மோசமான நிலைக்கு கொண்டுவந்த இந்த அரசு, பதவி விலகவேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து கிடையாது. இதேவேளை இந்த அரசை நீக்கிவிட்டு, யார் பதவிக்கு வருவார்கள்? என்ற விடயத்தையும் நாம் அவதானிக்க வேண்டும். அந்த விடயத்தில் கடந்த கால படிப்பினைகளையும் மனதில் வைத்து நாங்கள் செயற்படுவோம். எதிரணிகள் ஒன்று சேர்ந்து செயற்பட்டால், அது தொடர்பாக தக்க நேரத்தில் சரியான முடிவுகளை எடுப்போம்.

இந்திய பிரதமருக்கான கடிதத்தைக் கையளிப்பதற்கு, அதில் கைசாத்திட்டவர்கள் செல்கின்றார்கள். என்னையும் வருமாறு அழைத்துள்ளார்கள். அந்தக் கடிதம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த சொல்லி, கோரிக்கை விடும் கடிதம் என்று கூறுவது தவறு. அதிலே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன? இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகு இலங்கையிலே இடம்பெற்றிருக்கக் கூடிய முன்னெடுப்புக்கள் என்ன? இலங்கை அரசுகள் இந்தியாவிற்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் என்ன? என்பது தெளிவாக சொல்லப் பட்டிருக்கின்றது.

அதனடிப்படையில் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அத்தோடு நிற்காமல், அதற்கும் அப்பால் சென்று ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று இலங்கை அரசு, இந்தியா உட்பட உலகநாடுகளுக்கு தொடர்ச்சியாக வாக்குறுதிகள் வழங்கியிருக்கின்றார்கள். அதைத் தான் இந்த கடிதம் கோருகின்றது. முதலில் 13 ஆம் திருத்தத்தைக் கோரும் கடிதமாகவே அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த வேளையில், இலங்கை தமிழரசுக்கட்சி அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை. இப்படி வட்டுக் கேட்டைக்கு வழியைக் கேட்டால், 'துட்டுக்கு நாலு கொட்டைப் பாக்கு' என வியாபாரம் பேசுகிறார்.

ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப் பகிர்வான 13ஆவது திருத்தம் பயனற்றது என்பது எமது நிலைப்பாடு. ஆனால், அதைக் கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால், அதை நிறைவேற்றி அதற்கும் அப்பால் சென்று கொடுத்த அதிகாரங்களை மீளப்பெறமுடியாத ஒரு முறை வேண்டும் என்று இந்தக் கடிதம் கோருகின்றது.

எமது மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழே ஒரு மக்கள் எனும் ஸ்தானத்தைப் பெற்றவர்கள். எனவே, சுயநிர்ணய உரிமை எங்களுக்கு உண்டு. அதனை உள்நாட்டிலே பிரயோகிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். அந்தவகையில் சமஷ்டி கட்டமைப்பிலான அதிகாரப்பகிர்வு முறைதான் உகந்தது என்பதை, இந்தக் கடிதம் எடுத்து சொல்கின்றது. நோயும் தெரிகிறது, மருந்தும் தெரிகிறது. ஆனால் வைத்தியம் மட்டும் யாரரையும் செய்ய விடமாட்டோம் என்பது போல இவர் பேச்சு உள்ளது.

இந்திய, அமெரிக்க, சிங்கள அரசுகளின் புட்டிப் பாலில் உயிர் வாழும் எமது தலைவர்களை, மக்களால் தூக்கி எறியக் கூட முடியாத அடிமை வாழ்வில் எம் தேசமும், மக்களும் தவிக்கின்றனர். அந்த வகையில் தமிழரசுக் கட்சி பிறந்த பொழுது, பிறந்திராத இந்த அபூர்வ பிறவி, தான் செய்த இனத் துரோக அரசியலில் இருந்து அதன் பொருள், அதனுடைய நோக்கம், அது எதனைக் கோருகின்றது? அதன் தலையங்கம் அனைத்தையும் மாற்றியமைத் திருக்கின்றோம்" என்று பெருமைப் பேசுகிறார்.

பூமிபுத்திரன்








# போரும்.. விளைவும்...

**'காரணம் இல்லாமல் காரியம் இல்லை' என்பது நாமறிந்ததே!. சகல விடயங்களுக்கும் இந்தக் கூற்று பொருந்துவதைப் போன்று, போர்களுக்கும் இது பொருந்தும்.**

இரண்டு நாடுகள் ஒரு போரில் ஈடுபடுகின்றன என்றால், அத்தகைய போரினால் மனித அழிவுகளும், பொருண்மிய அழிவுகளும் நிச்சயம் என்று தெரிந்து கொண்டும், ஈடுபடுகின்றன என்றால் அதற்கான வலுவான காரணங்கள் நிச்சயம் இருக்கும். ஆநிரை கவர்ந்ததற்காகப் போர் நடத்திய காலம் மலையேறி விட்டது. அதுபோன்ற பிரச்சனைகளைப் பேசித் தீர்க்க உலக மன்றங்கள் உருவாகி விட்டன. சட்டம், நீதிமன்றம் போன்றவை வந்துவிட்டன. அவ்வாறு கூடப் பேசித் தீர்க்க முடியாதவிடத்தேயே போர்கள் தவிர்க்க முடியாத நிலையில் ஆரம்பமாகின்றன.

தற்போது நடைபெற்று வரும் ரஸ்ய - உக்ரைன் போர் (சிலவேளை இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது முடிவுக்குக் கூட வந்திருக்கக் கூடும்) கூட திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. மேம்போக்காகப் பார்க்கும் போது இது உக்ரைன் மீதான ரஸ்யாவின் ஆக்கிரமிப்பு போன்று தோன்றலாம். மேற்குலக ஊடகங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டு, அவற்றில் வெளிவருகின்ற செய்திகள் யாவும் கடைந்தெடுந்த உண்மை என நினைத்து, அவற்றை முழுவதுமாக நம்பிக் கொண்டிருப்போருக்கு புட்டின் ஒரு அரக்கனாகக் கூடத் தெரியலாம். ஆனால், தெரியாமல் இருக்கின்ற பல பின்னணி விடயங்களே இந்தப் போரின் காரணம் என்பதும், இந்தப் போர் உண்மையிலேயே உக்ரைன் மண்ணில் நடைபெற்றாலும், அங்கே ரஸ்யப் படைகள் சண்டையிட்டுக் கொண்டிருப்பது அமெரிக்காவுக்கு எதிராகவே என்ற உண்மையும் புரியும்.

அமெரிக்கா என்கின்ற ஏகாதிபத்தியத்துக்குச் சவாலாக விளங்கிய சக்தியாக சோவியத் ஒன்றியம் ஒரு காலத்தில் இருந்தது. இரண்டாம் உலகப் போரின் போது இரண்டு நாடுகளும் ஒரே அணியில் இடம்பெற்றிருந்தாலும் அது ஒரு தந்திரோபாயக் கூட்டாகவே விளங்கியது. உலகப் போரின் பின்னான காலகட்டத்தில், உலகில் தனது நவ காலனித்துவத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 'நேட்டோ' என்றொரு அமைப்பை அமெரிக்கா உருவாக்கிக் கொண்டது. உலகம் தெளிவான இரண்டு முகாம்களாக விளங்கிய அந்தக் காலகட்டத்தில்



அத்தகைய ஒரு தேவை இருந்ததாகக் கூட வைத்துக் கொள்ளலாம். 'கம்யூனிசம் ஒரு உலகளாவிய அபாயம்" என்ற கருத்தியலைக் கொண்டிருந்த மேற்குலகிற்கு, உலக நாடுகளின் வளங்கள் மீதான தனது தடையறாக் கொள்ளையை உறுதி செய்து கொள்ளவேண்டிய தேவை இருந்தமை புரிந்துகொள்ளக் கூடியதே!.

எனினும், **1991**இல் சோவியத் ஒன்றியம் சிதறுண்டபோது (அது தானாகவே சிதறுண்டது எனக் கூறுவதை விடவும், சிதற வைக்கப்பட்டது எனக் கூறுவதே மிகப் பொருத்தமானது) 'பனிப் போர் முடிவுக்கு வந்துவிட்டது. உலகில் வரலாறு மாற்றி எழுதப்பட்டு விட்டது" எனக் கொண்டாடிய மேற்குலகம் ‘நேட்டோ’வைத் தொடர்ந்து பேண விரும்பியது எதற்காக? என்ற கேள்வியை இன்றுவரை யாரும் பெரிதாக எழுப்பவில்லை. அதன்பிறகு இன்று வரையான காலப்பகுதியில் அமெரிக்காவும், நேட்டோவும் இணைந்து நடாத்திய போர்கள் சேர்பியா, ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா எனத் தொடரவே செய்தன. இந்தப் போர்களுக்கும் இன்றைய உக்ரைன் போருக்குமான தொடர்புகள் என்ன?

**1992**இல் அமெரிக்கா வெளியிட்ட மிக முக்கிய ஆவணம் ஒன்று இவ்வாறு கூறுகிறது. 'எதிர்காலத்தில் தனது மேலாண்மைக்குப் போட்டியாக வரக்கூடிய எந்தவொரு சக்தியானாலும் அதனை எப்பாடுபட்டாகிலும் தடுப்பது தனது இலக்கு."

இதன் அடிப்படையில் பார்க்கும் போது எதற்காக ரஸ்யா மீதும், சீனா மீதும் அமெரிக்கா இத்துணை காட்டமாக நடந்து கொள்கிறது? என்பது புலப்படும். **1991**இன் பின்னான காலங்களில் ரஸ்யா பல்வேறு துண்டுகளாக உடைந்துச் சிதறிப் போகும் என்றே அமெரிக்கா நம்பியது, எதிர்பார்த்தது. அத்தகைய நிலையில் உலகின் வளம்மிக்க நாடுகளுள் ஒன்றான ரஸ்யாவின் வளங்களைக் கொள்ளையிட அமெரிக்கா காத்துக் கிடந்தது. அதற்கு மாறாக ரஸ்யா மீண்டுவந்து, உலக அரங்கில் தனது வல்லரசுப் பாத்திரத்தை உறுதி செய்து கொண்டமையை, அமெரிக்காவால் சகித்துக்கொள்ள முடியாமல் போனது. அது மாத்திரமன்றி அரசியல் அரங்கிலும் சிரியா, ஆப்கானிஸ்தான், லிபியா, மாலி போன்ற நாடுகளில் மத்தியஸ்தம் ஊடாகவும், படை நடவடிக்கை ஊடாகவும் தனது வகிபாகத்தை ரஸ்யா நிலைநிறுத்திக் கொண்டது.

இன்றைய நிலையில் உலகில் மிகப் பெரிய எரிவாயு வழங்கல் நாடாக விளங்கும் ரஸ்யா, உலகின் இரண்டாவது மிகப் பெரிய எரிபொருள் ஏற்றுமதி நாடாகவும் விளங்குகின்றது. கோதுமை ஏற்றுமதியில் உலகின் முன்னணி நாடாக உள்ள ரஸ்யா, நிலக்கரியைப் பொறுத்தவரை உலகின்

மூன்றாவது ஏற்றுமதியாளராக உள்ளது. இவை தவிர, இரும்பு, தங்கம், பிளாட்டினம், அலுமினியம், செம்பு, வைரம் என கனிம வளங்களை அபரிமிதமாகக் கொண்ட நாடாகவும் விளங்கி வருகின்றது. இத்தகைய வளங்களைக் கொள்ளையிடக் காத்திருக்கும் அமெரிக்கப் பெருமுதலாளிகளின் அடியாளாகவே அமெரிக்க அரசாங்கம் நடந்து கொள்கிறது.

அது மாத்திரமன்றி, இன்று உலகில் தனக்குச் சவால்விடும் வகையில் வளர்ச்சி கண்டுவரும் சீனாவை நெருங்குவதற்காக, முதலில் ரஸ்யாவை வீழ்த்த வேண்டியத் தேவையை அமெரிக்கா உணர்ந்திருக்கின்றது. அதனை நோக்கமாகக் கொண்டே, தனது தேசத்தில் இருந்து பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் ஐரோப்பாக் கண்டத்தில் 'நேட்டோ' என்ற பெயரிலான கட்டுமானத்தை உருவாக்கி, போஷித்து வருகிறது அமெரிக்கா.

உக்ரைன் மீதான படையெடுப்பில் ரஸ்யப் பெருமுதலாளிகளின் நன்மைகள் அடங்கியுள்ளதாகப் பேசிவரும் மேற்குலக ஊடகங்கள், அமெரிக்கா தூண்டிவிட்ட உக்ரைன் போரில் அள்ளி இறைக்கப் பட்டுள்ள ஆயுதங்களால் நன்மை பெற்ற வியாபாரிகள் யார்? என்பது பற்றிப் பேசுவதில்லை. அது மட்டுமன்றி, அணுவாயுத வல்லரசான ரஸ்யா அணுவாயுதங்களைப் பாவிக்கும் நிலை உருவானால், அதனையொட்டி ஒரு உலகளாவிய அணுவாயுத யுத்தம் தோன்றினால் உலகின் கதி என்ன? என்பது பற்றியும் அவை பேசுவதில்லை.

ரஸ்யா கோரியதெல்லாம் உக்ரைன் 'நேட்டோ'வில் இணையக் கூடாது என்பதையே!. அதுவும் கூட "முன்னாள் சோவியத் நாடுகளை 'நேட்டோ'வில் இணைத்துக் கொள்ள மாட்டோம்" என அமெரிக்கா 1991இல் வழங்கிய வாக்குறுதியை அடியொற்றியதே!. அந்த வாக்குறுதியை அமெரிக்கா காற்றில் விட்டு, கனநாளாகி விட்டமை பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. உக்ரைன் யாருடன் கூட்டில் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உள்ளதாகப் பேசும் ஊடகங்கள், ரஸ்யாவுக்குத் தன்னைக் காத்துக் கொள்வதற்கு உள்ள உரிமை பற்றிச் சிந்திக்கத் முன்வருவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, உக்ரைன் போரை அடியொற்றி உலக நாடுகள் சிலவற்றில் நடைபெறும் சில தலைகீழ் மாற்றங்கள் மிகுந்த கவனத்துக் குரியவை. அதிலொன்று யேர்மன் நாட்டின் படைத்துறை ஒதுக்கீடு மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களுக்குக் காரணமாக அமைந்த யேர்மனி மீது உலகப் போரின் முடிவில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் முக்கியமானது படைத்துறை அபிவிருத்திக் கட்டுப்பாடு பற்றியது. அந்தக் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றாக மீறி வரும் யேர்மனி இறுதியாக படைத்துறையின் ஒதுக்கீட்டை அதிகரித்திருப்பதானது தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது. ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஒன்றிற்கு உக்ரைன் போரைச் சாட்டாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே பார்க்க முடியும்.

அதேவேளை, உலகின் நடுநிலை நாடு எனப் பெருமை பேசிக் கொண்டிருந்த சுவிற்சர்லாந்து, தனது நடுநிலை(?)யைக் கடந்து, ரஸ்யா மீதான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இதுவும் கூடத் திடீரென எடுக்கப்பட்ட ஒரு முடிவு எனக் கடந்து போய்விட முடியாது.

ஒரு போரை அது எதனால் ஆரம்பிக்கிறது? என்பதில் இருந்து அல்லாமல், அது எதனை நோக்கிச் செல்கிறது? அதன் விளைவுகள் என்ன? என்பதன் மூலமேயே பகுப்பாய்வு செய்ய வேண்டும். அது ரஸ்ய உக்ரைன் போருக்கும் வெகுவாகப் பொருந்தும்.

ப்ரியமதா பயஸ், தமிழீழம்

# பிளாஸ்ரிக் எனும் அரக்கன்

## அடக்கி ஆளத்தெரியாத அரசாங்கம்

மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையின் மொத்த அம்சங்கள் 'சூழல்' எனலாம். நாள்தோறும் நாம் காண்கின்ற, எம்மைச் சுற்றியுள்ள சகல அம்சங்களையும் சூழல் என்பது குறித்து நிற்கும். அந்தவகையில் 'சூழல்' என்பது உயிர்வாழும் அங்கிகளுக்கு இடையில் காணப்படும் நிலைமைகளின் மொத்த கூட்டு என வரையறுக்கபடும். உயிரற்றனவாகிய பௌதீக, இரசாயன அசேதனங்களுக்கும், உயிர் வாழும் சேதனங்களின் பரிமாணங்களுக்கும் இடையிலான இடையீடுகளின் விளைவே இச்சூழல் நிலைமைகளாகும்.

உலகளாவிய ரீதியில் நாடுகளைப் பொதுவாக அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள், எனப் பிரிக்க முடியும். இத்தகைய இரண்டு வகையான நாடுகளிலும் குடித்தொகை அதிகரிப்பு, நகராக்க விருத்தி, கைத்தொழில் மயமாக்கம் என்பது பொதுவாகக் காணப்படும் விடயமாகும். குடித்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப தேவைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே, மனிதன் தனக்கு ஏற்படும் தேவைகளை நிவர்த்தி செய்ய முற்படும் போது, அதன் விளைவாக பல்வேறுபட்டப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளில் ஒன்றாகவே சூழல் மாசடைதல் என்பது காணப்படுகின்றது. அப்படி சூழலை மாசாக்கும் முக்கிய காரணியாக இலங்கையில் பிளாஸ்ரிக் காணப்படுகின்றது.

இலங்கையில் பிளாஸ்ரிக் கடந்த அரை நூற்றாண்டுகளாக எமது மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள நிலையில் அதிலிருந்து விடுபடுவது சிரமமாகத்தான் இருக்கின்றது பலருக்கு. பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவற்றால் கிட்டிய இலகுத் தன்மையும், சௌகரியங்களும் மனிதரோடு இவற்றைப் பிரிக்க முடியாததாக ஆக்கிவிட்டுள்ளது.

பிளாஸ்ரிக்கின் வருகை மனிதருக்கு எவ்வளவோ நன்மைகளை கொண்டு வந்த போதிலும், அவற்றின் கழிவகற்றல்தான் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. பிளாஸ்ரிக் கழிவுகள் சிறு சிறு துகள்களாக மாற்றம் கண்ட போதிலும், அது உக்கி அழிவதில்லை. இதனால் சூழலுக்கும், காலநிலைக்கும், ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாகியுள்ளது. பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் நிலத்திற்கும், நிலத்தடி நீருக்கும், கடல் நீருக்கும் மாத்திரமன்றி வளிமண்டலத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் மனிதர் மாத்திரமன்றி, விலங்குகள், கடல் உயிரினங்கள் என அனைத்து உயிரினங்களுக்கும் ஆரோக்கிய கேட்டினை ஏற்படுத்துகின்றது. தாவரங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. நுண்ணியிர்க் கிருமிகள் கூட விதிவிலக்கல்ல. அவைகளும் இந்த பிளாஸ்ரிக்கினால் பாதிப்படைந்து அழிந்து போகின்றன.

இந்த பிளாஸ்ரிக்கின் ஒரு பகுதி சிறு துகள்களாகி, மண்ணில் இருந்து மழை நீருடன் நிலத்தடி நீரோடு இணைகின்றன. பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் எரிக்கப்படும் போதும், அவை அதிக மாற்றமின்றி வளிமண்டலத்தில் சேர்கின்றன. இத்துகள்களும் மழை நீரோடு கலந்து, நிலத்தை வந்தடைந்து, கீழிறங்கி நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றது. இதனால் நிலத்தடி நீர் மாசடைந்து, எமது குடிநீரும் மாசடைகின்றது.





மழை வீழ்ச்சியுடன் கலந்து வரும் இதன் துகள்கள் ஆற்று நீரையும், நீர்த் தேக்கங்களையும் மாசுபடுத்துகின்றன. இதனால் ஆற்றிலிருந்து பெறப்படும் குடிநீரும் மாசமடைந்தே காணப்படுகின்றது. வடிகட்டலையும், சுத்திகரிப்பையும் தூண்டும் அளவுக்கும் பிளாஸ்ரிக் துகள்கள் மிகச் சிறியனவாக உள்ளமையால் குடிநீர் மாசினைத் தவிர்க்க முடியாது இருக்கின்றது. எனவே இதுவரையும் இலங்கையில் மண்ணோடு கலந்த பொலித்தீன்கள் மற்றும் பிளாஸ்ரிக்குகள் இன்னும் மண் வளத்தைப் பாதிக்கக்கூடிய நிலையிலேயே இருக்கின்றதென்பதை மறந்துவிடக் கூடாது.

எரித்தாலும் சுவாசத்திற்கு ஒவ்வாத நச்சு வாயுவான டயோக்சினை வெளியேற்றும். எனவே, இதற்கு ஒரே தீர்வு சூழலுக்கு உகந்த வகையான பொலித்தீன்களை உருவாக்குவதாகவே இருக்கும். வருடமொன்றுக்கு இலங்கையில் 5,00,000 மெற்றிக்தொன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் 70 வீதம் அதாவது 3,50,000 மெற்றிக் தொன்கள் உள்ளூர் பாவனைக்கும் 30 வீதமான (1,50,000 மெட்ரிக் தொன்கள்) ஏற்றுமதி வர்த்தகத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் 40 வீதமான (1,40,000 மெற்றிக் தொன்கள்) பிளாஸ்ரிக் மற்றும் தடிப்பமான பொலித்தீன்கள் மீள் சுழற்சிக்குட்படுத்தப்படுகின்றன. 160 நிறுவனங்கள் பிளாஸ்ரிக் மீள் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. இவை இன்னும் அதிகரிக்கப்பட வேண்டுமென சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காரணம், 60 வீதமான (2,10,000 மெட்றிக் தொன்கள்) பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கள் கழிவுகளாகச் சேருகின்றன. இவற்றில் பொலித்தீன்கள் இலங்கையில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுகளாக இருக்கின்றன. கடந்த 2000 ஆம் ஆண்டே பங்களாதேஷ் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்து விட்டது. ஆனாலும் அங்கு சட்டவிரோதமாக பொலித்தீன்கள் விற்கப்படுவதாக ஊடகத் தரவுகள் தெரிவிக்கின்றன. நிலத்தையும், நீரையும் அழித்து மாசாக்கும் இந்த பிளாஸ்ரிக் உற்பத்தியை மண்ணில் வீசாமல் மீள் உருவாக்கம் செய்ய வடக்கில் மீளுருவாக்கும் தொழிற்சாலை அவசியம். நிலத்தில் வீசப்படும் பிளாஸ்ரிக்கினால் நீரும், நிலமும், சூழலும் மாசாகின்றமை அறியாத விடயம் இல்லை.

நிலம் மாசடைதல் என்பதற்கு நுட்பமான வரைவிலக்கணத்தைக் கூறுவது கடினமாக உள்ளது. ஒரு பரந்த அர்த்தத்தில் கூறுவதாயின் ஒன்று அல்லது பல இயற்கையான மானிட தூண்டற் காரணங்களால் நிலத்தின் பௌதீக இராசாயண உயிரியற் தரம் பாதிக்கப்படுதல், நிலம் மாசடைதல் என்று கூறலாம். பொதுவாக மண் வளமிழத்தல் அல்லது நிலச்சீர்குலைவு முக்கிய பிரச்சினையாகின்றது.

இயற்கையான, மானிட காரணிகளின் விளைவால் நிலவளம் குறைவடைகின்றது. அந்தவகையில் மனிதனால் தூண்டப்பட்டவையாக விவசாய நடவடிக்கை, சேதனப்பொருட்களின் இழப்பு, காடழிப்பு, சேனைப் பயிர்ச் செய்கை, கைத்தொழில் நடவடிக்கை, உவராதல், பாலைவனமாதல் என்பவற்றுடன் சனத்தொகை, வறுமை, நிலவுடமைப் பிரச்சினை, முறையற்ற நிர்வாகம், பொருத்தமற்ற விவசாயம், அரச கொள்கைகள், சுகாதாரப் பிரச்சினைகள், அறிவின்மை, விவசாய இரசாயனங்களின் அதிகமான பாவனை, கவனயீனமான கழிவகற்றல், யுத்த நடவடிக்கை போன்ற மானிடக்காரணிகளும், மேற்கொள்ளப்படும் செயற்பாட்டினாலும் இயற்கையின் செயற்பாட்டிலானலும் நிலமானது மாசடைகின்றது.

சில நிமிடம் பயனைத் தந்து விட்டு, சில நூற்றாண்டுகளுக்கு எமக்கும், இந்த மண்ணுக்கும் தீராதத் தீமையைத் தந்துவிட்டுப் போகின்ற பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், அவற்றை மண்ணில் போட்டு மண்ணையும், நீரையும் நாசம் செய்யாமல் சுழற்சி முறைக்கு இட்டுச்செல்ல நாம் தலைப்படவேண்டும். பிளாஸ்ரிக் பைகள், கழிவு நீர்க் கால்வாய்களை அடைகின்றன. மண்ணில் புதைந்து நிலத்தடி நீரினை மாசடைய வைக்கின்றன. மரங்களின் வேர்களை வளர விடாது தடுக்கின்றன. ஆகவே இந்த பாதிப்புக்களை ஏற்படுத்தும் பிளாஸ்ரிக் கழிவுகளை மீளுருவாக்கம் செய்ய எல்லோரும் முன்வரவேண்டும்.

வளங்களை கொள்முதல் செய்தல், பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது சேவைகளை வழங்குதல் போன்றவற்றை அதி உயர் திறமை, அதிக இலாபம், சுற்றுச்சூழலுக்குக் குறைந்த பாதிப்பு ஆகிய அம்சங்களுடன்




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPOrtas
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

செய்வதற்கான ஒருங்கிணைந்தத் தடுப்பு சுற்றுச்சூழல் மற்றும் வணிக உத்தியைத் தொடர்ந்து பயன்படுத்துவதுதான் தூய்மை உற்பத்தி ஆகும். இந்தத் தூய்மை உற்பத்தியைப் பிளாஸ்ரிக்கை மண்ணில் வீசாது, மீளுருவாக்கம் செய்வதன் மூலம் நாம் நிலைநாட்டிட முடியும்.

தூய்மை உற்பத்தி என்பது நமது வணிக மற்றும் தொழில் நடவடிக்கைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதுடன், குறைந்த மூலப் பொருள் அல்லது வளங்களிலிருந்து கிடைக்கும் பயன்களை அதிகரிக்கச் செய்வது ஆகும். திண்மக்கழிவான இந்த பிளாஸ்ரிக் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் பொருளாதார பெறுமதியற்ற திண்மப்பொருளாக காணப்படுகின்றது.

அதாவது வீடுகள், வைத்திய சாலைகள், வர்த்தக வியாபாரங்கள், கைத்தொழில் மற்றும் விவசாய செயற்பாடுகளினால் மட்டுமன்றி பொதுத் துறைகளாலும் வெளியேற்றப்படுகின்ற திரவமல்லாத பிளாஸ்ரிக் கழிவுகள் - உணவுக் கழிவுகள், கட்டட நிர்மாணக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், கடதாசி, உலோகங்கள், பிளாஸ்ரிக் கண்ணாடி முதலானவற்றையும், பொதி செய்வதனால் உண்டாகும் கழிவாக இது பல்வேறுபட்ட வித்தியாசமான பொருட்களினை உள்ளடக்குகின்றது.

திண்மக் கழிவுகளானது நாட்டுக்கு நாடும், வீட்டுக்கு வீடும், தொழிற்சாலைக்கு தொழிற்சாலையும் வேறுபடுகின்றது. சிலவேளைகளில் குறிப்பிட்ட சில பொருட்கள் குறித்த நாட்டினில் அல்லது தொழிற்சாலையினால் அல்லது நபரினால் கழிவுகளாகக் கருதப்படலாம்.

எமது பிரதேசத்தில் கடதாசி, தேங்காய் சிரட்டை, பிளாஸ்ரிக் என்பனவற்றை திண்மக்கழிவுகளாக கழிக்கின்றார்கள். உண்மையில் இவை பெறுமதியுள்ள வளங்களாகும். உகந்த முகாமைத்துவத்தின் ஊடாக இப்பொருட்களிலிருந்து பல நன்மைகளினை பெற்றுக் கொள்ளலாம். எமது மாநகர சபையும் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து சேதனப் பசளைகளாக மாற்றி, விற்பனை செய்து வருவதாக அறிகின்றோம். வளி மாசடைதல், நீர் மாசடைதல், மண் மாசடைதல், சுகாதாரப் பிரச்சினைகள் உயிரினப் பல்லினத்துவத்தின் மீதான சேதங்கள் இயற்கை காட்சிகளின் அழிவு, சமூகப் பொருளாதார பிரச்சினைகள் போன்றவற்றை கூறலாம்.

பல்வேறுபட்ட நுண்ணுயிர்களால் திண்மக் கழிவுகள் பிரிந்தழிகைக்கு உள்ளாக்கப் படுகின்றன. இச்செயற்ப்பாடுகளின் போது காற்றின்றிய நுண்ணங்கிகளின் செயற்பாட்டினால் பல்வேறுவகையான இரசாயன வாயுக்கள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாயுக்கள் வளிமண்டலத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு துர்நாற்றம் உருவாகும் காரணத்தினால் அவ்விடப்பரப்பில் வாழும் வதிவிடவாசிகளுக்குத் தொல்லைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இதனால் கழிவுகள் கழிக்கப்படும் இடங்களினைத் தெரிவு செய்தல் இலகுவான நோக்காக இருக்காது. திண்மக்கழிவுகள் காற்றின்றிய நுண்ணங்கிகளின் செயற்ப்பாட்டிற்கு உட்படும்போது உருவாகும் மெதேன் வாயுவானது, பூகோள வெப்பமுறலில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்துவது அறியப்பட்டுள்ளது. திண்மக்கழிவுகளின் காவுகையின் போதும், கழிவகற்றலின் போதும் தூசு துணிக்கைகள் பரம்பலடைகின்றது. இதனால் சுவாச சம்பந்தமான நோய்கள் ஏற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக கைத்தொழில் கழிவுகள் கழிவகற்றலுக்கு அகப்படும்போது உருவாகும் தூசுகளால் தீராத சுவாச நோய்கள் உருவாக்கப்படலாம்.

திண்மக்கழிவுகளால் உருவாக்கப்படும் மற்றுமொரு முக்கியமான பிரச்சினை நீர் மாசடைதலாகும். வடிகான்களை எவ்வளவுதான் துப்பரவு செய்தாலும் மக்கள் மத்தியில் போதிய ஒத்துழைப்பு வழங்குவதில் அசமந்தமாக இருப்பது கவலையளிக்கின்றது. இவ்வாறு தடுக்கப்பட்டுள்ள வடிநீரானது நுளம்புகள், பறவைகள், எலிகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படும் இடங்களுடன் தொடர்புபட்டு வாழுகின்ற ஏனைய விலங்குகளின் இனப்பெருக்க இடங்களாகச் செயற்படுகின்றன.

கிணறுகளும் வடிகால்வாய் நீரும் அவற்றினுள் கழிவுகள் கொட்டப்படுவதன் மூலம் மாசுபடுகின்றன. இதனால் உயிரியல் ஒட்சிசன் தேவை, இரசாயன ஒட்சிசன் தேவை மிக அதிகளவில் காணப்படுகின்றது. திரவக் கழிவுகளால் குடிநீர் தொற்றாக்குக்கு உள்ளாக்கப் படுவதன் மூலம் பல சுகாதாரப் பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. இதனாலேயே நச்சுத்தன்மையான திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதன் மூலம் மேலும் தீவிரமான சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

CENTURY
TRAVELS

# SUMMER 2022

## Frankfurt Direct Flights





5 STAR SERVICE

சிறப்பு சலுகை விலை

**MÜNCHEN COLOMBO**
**BERLIN COLOMBO**

இந்தியாவுக்கான விசா
ஒழுங்கு செய்து தரப்படும்

திகதி மாற்றம் இலவசம்

Date Change FREE

4 கிழமைக்குள் பணம் திருப்பித் தருதல்

Refund Within 4 WEEKS

இலங்கை விசா ~~60~~ 40

Srilanka Visa ~~60~~ 40

பதிவேற்றம் (Declaration Form)
Self Declaration Form
Corona Travel Information



Nishanthan 0176 2168 2149

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de

BOX

**ONE MONTH FREE**
**TALK TIME TO 132 COUNTRIES, INCLUDING INDIA AND SRILANKA, FOR EVER**
**V BOX PURCHSED IN GERMANY.**

# SUPER SALE
## IN GERMANY




# 119 €
CALL ONLY
**+49 1514 6978484**




24 மணிநேர
தகவல் உதவிச்
சேவையுடன்

BOX

இப்போது அனைத்து
நாடுகளிலும்




**300 க்கும்
மேற்பட்ட Channels
மற்றும் 5,000க்கும் மேற்பட்ட
திரைப்படங்கள்**




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

## REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780